ஞாயிறு வெளியீடு | ஆண்டு சந்தா ரூ. 5 | தனிப்பிரதி 0—1—3 | REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 31—3—1946 | இதழ் 50

கற்பனைச் சித்திரம்:

## குமரிக் கோட்டம்

—(சென்றவாரத் தொடர்ச்சி)—

★

பழனி பாரியாகி,சோற்றுக்கே திண்டாடி, மனைவியால் வெறுக்கப்பட்டுத்தன் வீட்டு வாயற்படிக்கு வந்துநின்று, "அப்பா! புத்தியில்லாமல் ஏதோ செய்து விட்டேன், பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சவேண்டும், 'சீ நீசா! என் முகத்தில் விழிக்காதே! உன்னைக் கண்டாலே நரகம் சம்பவிக்கும்" என்று ஏசவேண்டும், பழனி கதறவேண்டும், பிறகு, அவனை மன்னித்து உள்ளேசேர்த்துக்கொள்ள வேண்டும், இதுவேசெட்டியாரின் நித்யப்பிரார்த்தனை.எந்தத்தெய்வத்திடம் மனுச்செய்தும், மகன் வாயற்படி வரவும்இல்லை, வறுமையால் தாக்கப்பட்டதற்காக, மனம் மாறினதாகவும் தகவலில்லை.

"கை கோர்த்துக்கொண்டு கலகலவென்று சிரித்துக் கொண்டே போனார்கள்"

"பழனி,ராஜாபோலத்தான் இருக்கிருன்"

"ரொம்ப அழகாகப்பேசுகிருன்"

"நேற்றுக் கூட்டத்திலே கல் விழுந்தபடி இருந்தது, பழனிகொஞ்சம்கூடப் பயப்படாமல், பேசிக் கொண்டே இருந்தான்" என்றெல்லாம் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன, ஒவ்வோர் செய்தியும் செட்டியாருக்குச்செந்தேள்தான்! துடித்தார், அவன் துயரமின்றிச் சந்தோஷமாக வாழ்கிருன் என்று கேட்டு. தகப்பனர் மகன் விஷயமாகக் கொள்ளக்கூடிய உணர்ச்சியல்லதான், ஆனால் குழந்தைவேல் செட்டியார், பழனியைத் தன்மகன் என்றுஎண்ணவில்லை, தன்பணத்தை அலட்சியப் படுத்திய ஆணவக்காரன் என்றே எண்ணினர்.

"இருக்கட்டும் இருக்கட்டும்; அவள் எத்தனைநாளைக்கு இவனிடம்ஆசைகாட்டப்போகிருள்? முதலிலே கோபித்துக் கொண்டாலும் பிறகு சமாதானம் ஆகிவிடுவார், அப்போது சொத்து பழனிக்குத் தரப்படும், நாம் சொகுசாக வாழலாம் என்று அந்தச்சிறுக்கி எண்ணிக்கொண்டுதான், என் மகனைத் தன் வலையிலே போட்டுக்கொண்டாள். கடைசிவரை ஒரு பைசா கூட நான் தரப்போவதில்லைஎன்று தெரிந்தால், "போய்வாடா" என்று கூறிவிடுவாள், பயல், வந்துசேருவான். பணத்தாசையால்தானே அவள் அவனை மயக்கிவைத்தாள்" என்று எண்ணி, மனதைத்தேற்றிக் கொள்வார். அவருக்கென்னதெரியும், அவர்கள் சிருஷ்டித்துக் கொண்ட இராஜ்யத்திலே, பணத்துக்கு அல்ல மதிப்பு என்பது!

*  *  *

மறையூர், நால்வரின் பாடல் பெற்ற ஸ்தலமல்ல, ஆனல் அதற்கு அடுத்த படிக்கட்டிலிருந்த அடியார்கள் பலர், அந்த க்ஷேத்திரத்தைப்பற்றிப் பாடியிருக்கிறார்கள். அங்கிருந்த ஒருமண்மேடு, ஒருகாலத்தில் மால்மருகன் கோயிலாக இருந்ததென்று வைதிகர்கள் கூறுவர். குழந்தைவேல் செட்டியாருக்கு, மறையூர் முருகன் கோயிலைஅமைக்கும் திருப்பணியின் விசேஷத்தைத் தாழையூர் சனதனிகளும் மறையூர் வைதிகர்களும், கூறினர். அவரும், வெகுகாலத்துக்கு முன்புகலனுகிப் போன திருக்கோயிலை மீண்டும் அமைத்துத்தரும் பாக்கியம் தமக்குக்கிடைத்ததே என்று பூரித்தார். பணத்துக்குக்குறைவில்லை,ஆகவே, நினைத்தமாத்திரத்தில் ஆள் அம்பு தளவாடங்கள் வந்து சேர்ந்தன, செட்டியார்மறையூர்முகாம்ஏற்படுத்திக்கொண்டு,கோயில் வேலையை, ஆரம்பித்துவிட்டார். பலஊர்களிலிருந்து, கட்டட வேலைக்காரர்கள், சிற்பிகள், ஓவியக்காரர், கூலிகள் ஆகியோர் மறையூர் வந்து குவிந்தனர். மறையூர் சேரிக்குப் பக்கத்திலே, நூறுகுடிசைகள் புதிதாக அமைக்கப்பட்டு, அவைகளிலே கூலிவேலை செய்பவர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதிகாலை எழுந்திருப்பார், காலைக் கடனை முடித்துக்கொண்டு, திருப்பணியைக் கவனிப்பார். அரைத்த சுண்ணும்பை எடுத்துப்பார்ப்பார், செதுக்கியகற்கம்பங்களைத் தடவிப் பார்ப்பார், வேலையாட்களைச் சுறுசுறுப்பாக்குவார். சோலையிலே புஷ்பங்கள் மலர்த்தொடங்கியதும் வண்டுகள் மொய்த்துக்கொள்வது போல, மறையூரில் வேலையாட்கள் குழுமிவிட்டனர். ஒவ்வோர் மாலையும், அங்கிருந்த பெரிய ஆலமரத்தடியிலே அமர்ந்து, அன்றுடக்கூலியைத்தருவார்.

பழனிமேல் ஏற்பட்டகோபம், செட்டியாரின் செரத்தை மதிலாகவும் பிரகாரமாகவும், திருக்குளமாகவும் மண்டபமாகவும் மாற்றிக் கொண்டிருந்தது. இந்தக் கோயில் கட்டும் வேலையிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த வேலையாட்களிலே, பெண்களும் ஏராளம். அவர்களிலே குமரி ஒருவள். மாநிறம், ஆனல் உழைப்பால் மெருகேறின உடல், குறுகுறுப்பான பார்வை, இயற்கையான ஓர் புன்னகை தவழ்ந்தபடி இருக்கும்,என்னவேலைசெய்துகொண்டிருந்தாலும் மெல்லிய குரலிலே ஏதாவது பாடிக்கொண்டே இருப்பாள். இருபதுக்குள் தான் வயது. பருவகொர்வத்துடன் விளங்கும் அப்பாவையின் பார்வையிலேயே ஓர்விதமயக்கும் சக்தி இருந்தது. கொச்சைப்பேச்சோ, வேதாந்திக்குக்கூட இச்சையைக் கிளறி விடுவதாக இருக்கும். அவள் கோபமே கொள்வதில்லை.

"ஏலே! குட்டி! என்ன அங்கே குரங்கு ஆட்டம் ஆடறே!" என்று மேஸ்திரி முத்துசாமி மிரட்டுவான், குமரிபயப்படவுமாட்டாள்,கோபிக்கவுமாட்டாள், "அண்ணி, காலையிலேசண்டைபோட்டுதா?" என்று கேலிபேசுவாள். கடைக்கண்ணல் பார்ப்பது குமரிக்கு வழக்கமாகிவிட்டது. கடைக்கண்ணல் பார்த்துக்கொண்டே, முகவாய்க்கட்டையில் கைவைத்து விட்டு, கழுத்தை ஒருவெட்டு வெட்டி, "அடே, அப்பா! காளைமாடு மாதிரி விழிக்கிருன் பாரு. ஏமாறுகிறவ நான் இல்லே. அதுக்குவேறே ஆளைப்பாருடா, ராசாதேசிங்கு" என்று குறும்பாகப்பேசுவாள், யாராவது அவளிடம் கொஞ்சம், அப்படிஇப்படி நடக்கநினைத்தால்.

குட்டி, பார்ப்பதும் சிரிப்பதும், குலுக்கிநடப்பதும், வெடுக்கென்று பேசுவதும் பார்த்தா, தொட்டால் போதும் என்று தோன்றுகிறது, கிட்டே போனலோ, நெருப்பு, நெருப்பிடம் போவது போலச்சீறி விழுகிருளே, இப்படிஒருவள் இருப்பாளா? என்று பலபேர் தோல்விக்குப்பிறகு பேசிக்கொள்வார்கள். குமரிக்கு, அங்கிருந்தவர்களின் சுபாவம் நன்றாகத் தெரியும். தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் வழியும் தெரியும். அதற்காக வேண்டி, யாருடனும் பழகாமலும் இருக்க மாட்டாள். தாராளமாகப் பழகுவாள், ஆனல்'கெட்டபேச்சு' வரும் என்று தெரிந்தால் போதும், வெட்டி விடுவாள். காற்றிலே அலையும் ஆடையைச்சரிப்படுத்த நிற்பாள், குறும்புக்காரரின் கண்கள் தன்மீது பாய்வதைக் காண்பாள், முகத்தை எட்டுக் கோணலாக்கிக் காட்டுவாள். அண்டமுடியாத நெருப்புஅவள். அவள் அண்ணனே, மகா கோபக்காரன். குமரியைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற நாணயமானகருத்தைக் கொண்டவர்கள்கூடச் சொக்கனிடம்(குமரியின் அண்ணனிடம்)கேட்கப்பயப்படுவார்கள். தாய் தந்தை இருவரும் இல்லை. தங்கைக்கு அண்ணன் துணை, அண்ணனுக்குத் தங்கைதுணை. இருவருக்கும்,ரோஷ உணர்ச்சியே பலமான கவசம்.

குமரி, வேலைசெய்யு மிடத்திலே இருந்தவரை வரையும் 'எடை' போட்டுவிட்டாளேதவிர, செட்டியாரை அவள்சரியாக எடைபோடவில்லை. பாவம், பெரியமனுஷர், மெத்தாநி, உபகாரி, ஏழைகளிடம் இரக்கம் உள்ளவர், என்றுதான் குமரியும், மற்றவர்களைப்போலவே, அவரைப்பற்றித் தெரிந்திருந்தாள். மற்றவர்களிடம் பேசுவதைவிட, அவரிடம் கொஞ்சம் அடக்கமாகவே பேசுவாள். "பாரங்கோ! மனுஷன்இப்படிச் செத்திருக்கு! பகவானுக்கான காரியம், பாவ புண்யம் பார்த்து வேலை செய்யுங்கள், கேவலம் பணத்தை மட்டும் கவனித்தால் சரி இல்லை" என்று செட்டியார் சொல்வார், மற்றவர்கள் முணு முணுத்தாலும் குமரி மட்டும் குறை கூறமாட்டாள். ஓடிப் போய், மணற் குவியலைச் சரிசெய்வாள்.

மீனு, ஒரு குறும்புக்காரி, கொஞ்சம் கைகாரியுங்கூட. அதற்காகவே அவளுக்கு, மேஸ்திரி ஒருநாள் தவறுமல் வேலைகொடுப்பான். இடுப்பிலேகூடைஇருக்கும், அதுநிறைய மணல் இருக்காது, ஒய்யார நடை நடப்பாள், பாக்கு இருக்கா அண்ணேன்! ஒரு வெத்திலைச் சருகு கொடுடிமுனி! என்றுயாரையாவது ஏதாவது கேட்டபடி இருப்பாள். கொடுத்தாகவேண்டுமென்பதில்லை. மேஸ்திரியிடம் பேசுவதிலேரொம்ப குஷி அவளுக்கு. அவனுக்குந்தான்.

'மேஸ்திரியாரே! இருக்குதா?'

கருக்குமீசைக்காரனை, இருக்குதான்னு கேக்கறயே!

"நான் எதைக்கேட்கறேன் நீ எதைச் சொல்கிறே"

"கேட்டதற்குப் பதில். நீ என்ன இருக்கான்னு கேட்டே"

"கொஞ்சம் புகையிலை கேட்டேன்"

"காரமா இருக்கும்"

'பரவாயில்லை. அந்தக்காரத்தைக் காணதவளா நானு. கொடுங்க இருந்தா' இப்படிப்பேச்சுநடக்கும். இருவரும் பேசும்போது மற்றப் பெண்கள் இளித்துக்கொண்டு நிற்பார்கள். விடமாட்டாள் மீனு.

"என்டி! என்னமோ காணுததைக் கண்டவங்க மாதிரி முழிச்சுக்கிட்டு இருக்கறிங்க"

"ஒண்ணுமில்லையே, அக்கா"

"அக்காவாகாணு இவ கொழுந்தை! வயசு பதனுறு"

இவ்விதம்வேடிக்கையாகப்பேசுவாள் மற்றப் பெண்களிடம் - நெருதல், தலையில் கட்டிய பாகை, வெத்திலைப்பை, இவைகள் அடிக்கடி, மீனுமீதுதான் விழும். மேஸ்திரி இவைகளை அடிக்கடி வீசுவார், அவள் ஏசமாட்டாள். அவளுக்கு அவன் கொடுத்துவந்த எட்டணா கூலி, இந்த விளையாட்டுக்கும் (விபரீத மற்ற) சேர்த்துத்தான்.

ஒருகெட்ட வழக்கம் மீனுவுக்கு முடிபோட்டு விடுவாள்! திடீ[illegible]ரென்று தன் மனம் போன போ[illegible]க்கிலே ஜோடி சேர்த்து விடு[illegible] கற்பனையாகவே அவளு[illegible] 'ஆட்டம்' பலசமயங்களில் [illegible]

## ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 செ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.


ததுண்டு. “உன் பல் ரொம்பப் பொல்லாதது, ஒன்றும் சொல்லி விடாதேடியம்மா” என்று கெஞ்சுவார்கள் மற்றவர்கள்,“ இல்லாததை நான் சொல்லமாட்டேன்” என்று கூறுவாள் மீனா.

மீனாவின் கண்களுக்குத்தான் முதலில், தெரிந்தது, குமரியின்மீது செட்டியாரின் நோக்கம்செல்வது! குமரிக்குத் தெரிவதற்கு முன்பே, மீனாவுக்குத்தெரிந்துவிட்டது!குமரி, எந்தப்பக்கத்திலே வேலை செய்துகொண்டிருந்தாலும் அந்தப்பக்கம்தான் செட்டியார் அடிக்கொருதடவை வருவார். மற்றவர்களை, இதைச்செய், அதைச்செய்,என்று நேரிலே கூப்பிட்டுச் சொல்வதற்குப்பதில், குமரியைக் கூப்பிட்டனுப்பி அவள் மூலமாகவேசொல்லி அனுப்புவார். அதாவது, குமரியை அடிக்கடி தன்பார்வையிலே வைத்துக்கொண்டிருக்கச் செட்டியார் ஆசைப்பட்டார். எத்தனை நாளைக்குச் செடியிலே இருக்கும்மலரைப் பார்த்து மகிழ்வதோடு இருக்கமுடியும். ஒருநாள் பறித்தேவிடுவது என்றுதீர்மானமாகித்தானேவிடும்! உலகமறிந்தவள்மீனா, ஆகவேஉருத்திராட்சம் அணிந்தால்என்ன,விபூதி பூசினாலென்ன, நல்ல முகவெட்டுக்காரியிடம், மனம் தானாகச்சென்று தீரும், அதிலும், கள்ளங்கபடமற்ற குமரியிடம் காந்தசக்திஇருக்கிறது, என்பதை அவள் அறிவாள்.ஆகவே செட்டியார், குமரியைக்கூப்பிட்டு அனுப்புவது போதாதென்று, மீனா வேசிலசமயங்களிலே, குமரியைச் செட்டியாரிடம்போய், சுண்ணாம்பு அரைத்தது சரியா இருக்காஎன்று கேட்டுவா, நாளைக்குப் பிள்ளையார் பூஜைக்கு மகிழம்பூ வேண்டுமா என்று கேட்டுவா, என்றுஏதாவது வேலை வைத்து அனுப்புவாள் பாபம், ஒவ்வொருதடவையும் குமரி. தபால் எடுத்துக்கொண்டுமட்டும் போகவில்லை,மையலையும்தந்துவிட்டு வந்தாள் அந்தப்பக்தருக்கு. தன்னையும் அறியாமல். அவள் சேதியைக் கூறுவாள், அவரோ அவளுடைய சுந்தரத்தைப்பருகுவார். எவ்வளவு இயற்கையான அழகு! கண்களிலே என்னபிரகாசம்! உடல் எவ்வளவு கட்டு! இவ்வளவுக்கும் ஏழை! அன்றாடம்வேலை! அழுக்கடைந்தபுடவை! உப்பிரஜாதி'(ஒட்டர்)மாளிகையிலே உலவவேண்டிய சௌந்தரியவதி, என்று எண்ணிப்பரிதாபப்படுவார். ஒருநாள், கையில் சுண்ணாம்புக்கறைபடிந்திருந்ததைக் கழுவ எண்ணி,‘குமரி!கொஞ்சம்தண்ணீர் கொண்டு வரச்சொல்லு” என்றார் செட்டியார். வழக்கமாக,மேஸ்திரிதான் தண்ணீர் கொட்டுவார், அவர் முதலியார் வகுப்பு. அன்று மேஸ்திரிக்கும்மீனாவுக்கும்பலமான பேச்சு, “ஆண் உசத்தியா, பெண் உசத்தியா” என்று. ஆகவே, குமரி கூப்பிட்டும் அவர் வரவில்லை. சரேலெனத்தண்ணீர் செம்பை எடுத்துக்கொண்டு குமரியே போனாள். செட்டியாரும் எங்கேயோ கவனமாகஇருந்ததால், தண்ணீர்எடுத்து வந்தது யார் என்று கூடக்கவனிக்காமல், கையை நீட்டினார், குமரி தண்ணீர் ஊற்றினாள், “போதுண்டா” என்றார் செட்டியார், அவருடையநினைப்பு தண்ணீர் கொட்டியது மேஸ்திரிதான் என்பது. குமரி களுக்கென்று சிரித்துவிட்டாள். செட்டியாருக்கு அப்போதுதான் விஷயம் விளங்கிற்று. அதுவரை அவர் உப்பிரஜாதியாள் தொட்ட தண்ணீரைத்தொட்டதில்லை. என்ன செய்வது, அவள் அன்போடு அந்தச்சேவை செய்தாள். எப்படிக் கோபிப்பது! “நீயா?” என்றுகேட்டார், “ஆமாங்க! மேஸ்திரிக்குத்தான் வேலை சரியாக இருக்கேஅதனாலேதான் நான் எடுத்துவந்தேன். தப்புங்களா? கையைத்தானே கழுவிக்கொண்டீங்க, உள்ளுக்குச்சாப்பிட்டாதானே, தோஷம்” என்று கேட்டாள். தொட்டநீரைத்தொடுவது கூடத்தோஷம் என்பதுதான் செட்டியாரின் சித்தாந்தம் ஆனால் அந்தப்பெண், சூதுவாதறியாது சொன்னபோது என்ன செய்வார். செட்டியார் ஒருபடி முன்னேறினார், “உள்ளுக்குச் சாப்பிட்டாத்தான் என்னவாம். குடலா கருக்கும்!” என்றார். “எல்லாம் மனசுதானுங்களே காரணம்!” என்று கொஞ்சுங்குரலில் கூறினாள் குமரி. “அதுசரி! ஆமாம்!” என்று கூறிவிட்டு, விரைவாக உள்ளே போய்விட்டார். அவள் விட்டாளா! கூடவே சென்று, செட்டியாரின் நெஞ்சிலே புகுந்துகொண்டாள். எல்லாம் மனந்தானே! சிவப்பழமாக இருந்தால் என்ன? மனந்தானே அவருக்கும்.

* * *

“யாரை நிறுத்தினாலும் நிறுத்திவிடுவார், குமரியைமட்டும் நிறுத்தவேமாட்டார்”

“ஏன்? என்னவிஷயம்?”

“செட்டியாருக்குஅவளைப்பார்க்காவிட்டா, உசிரேபோயிடும்”

“அம்மா, அவ்வளவு சொக்குப்பொடி போட்டுவிட்டாளா அந்தச் சிறுக்கி”

“பொடியுமில்லை,மந்திரமுமில்லை! அவளைக்கண்டவன் எவன்தான், தேனில் விழுந்த ஈ போலாகாமலிருக்கிறான். அவகூடக்கிடக்கட்டும், கொஞ்சம் மூக்கும் முழியும் சுத்தமா, ஒருபெண் இருந்தா, எந்தஆம்பிள்ளை, விறைக்க விறைக்கப்பார்க்காமே இருக்கறான். செட்டியார், என்னமோ கோயில் கட்டலாமென்றுதான் வந்தார். அவர் கண்டாரா, இங்கே இந்த “குண்டுமூஞ்சி” இருப்பாளென்று.”

“செட்டியார் மேலே பழிபோடாதே. அந்த ஆசாமிரொம்பவைதிகப்பிடுங்கல். அவ, கைபட்ட தண்ணீரைக்கூடத் தொட மாட்டார். ஒரேமகன் அவருக்கு. ஜாதியை விட்டு ஜாதியிலே சம்பந்தம் செய்கிறேனென்றஉடனே, போடா வெளியே என்று கூறிவிட்டவர்”

“மவனுக்குச் சொன்னாரு, அப்பாவா இருந்ததாலே. இவருக்கு எந்த அப்பன் இருக்காரு, போ வெளியேன்னு சொல்ல”

மேஸ்திரி, மீனாவிடமிருந்துதெரிந்துகொண்ட இரகசியத்தைச் சமயம்வரும் போது தனக்குச் சாதகமாகஉபயோகித்துக்கொள்ளலாம் என்று எண்ணி, மேற்கொண்டு தகவல்களைக் கேட்டறிய விரும்பினான். மீனா, மேஸ்திரியின் ஆவலைத் தெரிந்து கொண்டு சிரித்தபடி, “செச்சே! நீ, அதுக்குள்ளே எல்லாம் முடிஞ்சி போச்சின்னுநினைக்காதே. செட்டியாருக்கு அவகிட்ட கொள்ளெ ஆசை இருக்கு, ஆனா பயமோ மலையத்தனை இருக்குது. மேலும், குமரி வேடிக்கையாகப் பேசுவாளேதவிர ரொம்ப ரோஷக்காரி, அதனாலே, செட்டியார் ஏதாவது இளிச்சா, அவ, அண்ணனிடம் சொல்லி விடுவா. சும்மா, பார்க்கறதும், சிரிச்சிப் பேசறதுமா இருக்க வேண்டியதுதான்” என்றுகூறினாள். உண்மையும் அதுதான். செட்டியார் குமரியின் பார்வையையே விருந்தாகக் கொண்டு வாழ்ந்துவந்தார். ஜாதிகுல பேதங்கள் அர்த்தமற்றவை என்று பழனி எவ்வளவோ ஆதாரத்தோடு கூறியும், கேட்கமறுத்த செட்டியாரின் மனதிலே, அந்தப் பெண்ணின் ஒருபுன்னகை எவ்வளவோ புத்தம்புதுக்கருத்துக்களைத் தூவிவிட்டது. ஜாதியாம்,மகாஜாதி, இந்தப் பெண்ணுடைய இலட்சணத்துக்கும் குணத்துக்கும் ஒருவன் இலயிப்பானேதவிர, இவள் ஜாதியைக்கண்டு பயப்படுவானா என்ன என்றுகூட நினைத்தார். ஒரு கணம் அவ்விதம் நினைப்பார், மறுகணமே மாறிவிடும். இதுதான் சோதனை—மாயை என்னை மயக்க வந்திருக்கிறது—இதிலிருந்து தப்பித்தாகவேண்டும் என்று தீர்மானித்து, தேவார திருவாசகத்தையும் அடியார்கள் கதைகளையும், முன்பு படித்ததைவிட மேலும் சற்று அதிக ஊக்கமாகப் படிக்கத் தொடங்கினார். அந்தப் பாவையை மறந்துவிடவேண்டும் என்ற திட்டம் அவருடையது. பாபம், அவருக்கு (அதுவரை)த் தெரியாது, காதல் பிறந்தால், அதன் கனலின் முன்பு எந்தத் திட்டமும் தீய்ந்து போய்விடும் என்ற உண்மை.

“தோடுடைய செவியன்” என்ற பதிகத்தை அவர், அதற்கு முன்பு எத்தனையோ நூறுமுறை படித்ததுண்டு. அப்போதெல்லாம், இருஷபம் ஏறிக்கொண்டு, ஜடையில் பிறையுடன் சிவனார் வருவது போலவே, அவருடைய அகக்கண் முன் சித்திரம் தோன்றும்; பரமனுக்குப் பக்கத்திலே, பார்வதிநிற்பதும் தெரியும், ஆனால், அப்போதெல்லாம், ஐயனுடைய அருள் விசேஷத்தைப் பற்றியே செட்டியார் கவனிப்பார். குமரியின்மீது ‘ஆசை’ உண்டானபிறகோ, பதிகம் பாடியானதும், பார்வதியும் பரமசிவனும் அவர் மனக்கண்முன் தோன்றுவதும், பார்வதி பரமசிவனை அன்புடன் நோக்குவதும், அந்த அன்புப்பார்வையால் ஐயனுடைய அகம்மகிழ்ந்து முகம் மலர்வதும் ஆகிய காதல் காட்சியே அவருக்குத் தெரியலாயிற்று. பதிகம்பாடி, பிரேமையை மாய்க்க முடியவில்லை—வளர்ந்தது. ஏகாந்தமாக இருந்து பார்த்தார்—தீகொழுந்து விட்டெரியத் தொடங்கிற்று. அவரையும் அறியாமல் அவர் மனதிலே ஒருவகை அச்சம் குடிபுகுந்து விட்டது. எப்படி நான் தப்பமுடியும்! என்ற அச்சம் அவரைப் பிடித்துக்கொண்டது. துறைமுகத்தருகே நின்றுகொண்டு, தன் கப்பலின் வரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கும், வணிகர்போல, அவர்மனம் பாடு பட்டது. குமரியின் கள்ளங்கபடமற்ற உள்ளம் அவருக்குத் தெரியும். பணிவுள்ளவளாக அவள் தன்னிடம் நடந்துகொள்கிறாள், பசப்பு அல்ல என்பதையும் அறிவார், தன்மனதிலே மூண்டுவிட்ட தீயை அவள் அறியாள், அறிந்தால் திகைப்பாள்என்பதும் தெரியும்.

கொடியிலே கூத்தாடும் முல்லையைப் பறிக்கும் நேரத்தில், வேலிப் பக்கமிருந்து தோட்டக்காரன், “ஏ! யாரது? கொடியிலிருந்து கையைஎடு” என்று கூவினால், எவ்வளவு பயம் பிறக்கும். தோட்டக்காரன் கூவாமல், முல்லையே “நில்! பறிக்காதே! உனக்காக அல்ல, நான் பூத்திருப்பது!” என்று கூவினால், பயம் எவ்வளவு இருக்கும்? அவ்விதமான அச்சம் செட்டியாருக்கு. அடக்கமுடியவில்லை, அவளோ அணுவளவும் சந்தேகிக்கவில்லை, செட்டியாரின் உண்மைநிலை தெரிந்தால் அவள் உள்ளம் எவ்வளவு வாடும், எவ்வளவுபயப்படுவாள், மதிப்புத்துளியாவதுஇருக்குமா? கொடியிலிருந்து முல்லைபேசுவதுபோல, அந்தக்குமரி, “ஏனய்யா! இதற்குத்தானா கோயில் கட்டுகிறேன் குளம்வெட்டுகிறேன் என்று ஊரை ஏய்த்தாய்? கட்டுகட்டாக விபூதி—காலைமாலை குளியல்—கழுத்திலே உருத்திராட்சம்—கந்தா முருகா என்று பூஜை. கல்உடைக்க வருபவளைக் கண்டால்,கைபிடித்து இழுப்பது, இது தான் யோக்யதையா? ஊருக்கெல்லாம் உபதேசம் செய்கிறாயே, உன்னுடைய வெளி வேஷத்தை நானும் நம்பினேனே! ஏதோ, வயிற்றுக்கில்லாத கொடுமையால் கூலிவேலை செய்ய வந்தேன். என்ன தைரியம் உனக்கு, வேலைசெய்ய வந்தவளை, வாடி என்று அழைக்க!” என்று கேட்டு விட்டால்! செ!பிறகு இந்த ஜென்மத்தைவைத்துக் கொண்டும் இருப்பதா? குளம் குட்டைதேட வேண்டியதுதான். ஆண்டவனே! என் சபலம், போக ஒருவழியும் இல்லையா? என்று செட்டியார் சிந்திப்பார், சிவனாரைத் துதிப்பார், நாளாகவாக, காதல் தன்னைப்பித்தனாக்கிக்கொண்டு வருவதைத்தெரிந்து பயந்தார்.

ஏதுமறியாதகுமரி, செட்டியார் ஏதோகவலையாக இருக்கிறார் என்பதை மட்டும் தெரிந்து கொண்டு, வருந்தினாள்.

“என்னாங்க உடம்புக்கு? ஒரு மாதிரியா இருக்கறிங்க”

“ஏன்! அதெல்லாம் ஒண்ணுமில்லையே!”

“ரொம்ப களைச்சாப்போலே இருக்கறிங்க”

“எனக்கென்ன களைப்பு! நான் என்ன, உன்போல வெயிலிலே வேலைசெய்கிறேனா?”


“உங்களுக்கு ஏனுங்க, தலை எழுத்தாஎன்ன, கூலிவேலைசெய்ய? நீங்கமகராஜா”

“உனக்குமட்டும் தலை எழுத்தா, இவ்வளவுஇளம்பிராயத்திலே சேற்றிலேயும் மண்ணிலேயும் இருக்க. குமரி! உனக்கு ஒரு பணக்காரனைப் பார்த்துக் கலியாணம் செய்து விட்டா, கூலிவேலை ஏன் செய்யப் போறேபிறகு”

“வேடிக்கையாப்பேசறிங்க. அது அதுக்குன்னு ஆண்டவன் அளவு போடாமலா அனுப்புவாரு”

(7-ம் பக்கம் பார்க்க)


தந்தி:- “புறுமார்க்” திருச்சி.



# "1957"க்கு 1946ல் ஏற்பாடா?

## வெகுண்ட வெள்ளையரின் வீணாசை

### கல்கத்தாவில் கட்டும் மனக்கோட்டை

## காலம் மாறிவிட்டது! கடை மூடுக!

—(C. N. A.)—

"மிஸஸ் கார்ட்டர்! கப்பலில் இடம் தேடிக்கொண்டாகிவிட்டதா?" என்று கேட்டார் எட்வர்ட்ஸ்.

"ஏன்?" என்று ஆச்சரியத்துடன் அந்த ஆங்கிலமாது கேட்டாள்.

"ஏனா! கல்கத்தா கெட்டுப்போய் விட்டது. இங்கு இனி, வெள்ளைக்காரப் பெண்மணிகள் வாழமுடியாது. ஆறுமாதத்துக்கு முன்பே நான் என்மனைவியையும் குழந்தைகளையும் ஊருக்கு அனுப்பி விட்டேன். நம்மவரில் அனேகர் அவ்விதமாகத்தான் செய்திருக்கிறார்கள்" என்று எட்வர்ட்ஸ் கூறினார்.

குதிரைப்பந்தய மைதானத்தில், குதிரைகளின் ஓட்டத்தைப்பற்றிப் பேசவேண்டிய வேளையில், வெள்ளைக்காரர்கள் இதுபோல, ஊருக்கு ஓடிவிடவேண்டியது தான், இனி இந்தியாவில் இருக்க முடியாது, இருப்பதுஆபத்து; முதலில்பெண்டு பிள்ளைகளை இங்கிலாந்துக்குஅனுப்பி விடவேண்டும், என்று பீதியுடன் பேசிக்கொண்டிருந்தனர். பீதிக்குக்காரணம் இல்லாமற்போகவில்லை. வெள்ளையரின்பிடி தளர்ந்து விட்டது. வெறுப்பும் கோபமும் நிறைந்த கண்களே எங்கு நோக்கினும். எந்த நிமிஷத்திலும் புரட்சி ஆரம்பமாகிவிடக்கூடும் என்றபயம் உலவிற்று. புரட்சிவாடை அடித்தபடி இருந்தது. ஆங்கில அதிகாரிகள், வியாபாரிகள், போர் வீரர்கள், பொழுது போக்கிகள் அனைவருமே, அச்சத்துடனேயே உலவினர். குதூகலவாழ்க்கைக்கு இடமாக இருந்த கல்கத்தாவில், வெள்ளைக்காரர், குசுகுசுவென்றுபேசிக் கொண்டிருந்தனர். மகத்தானபுரட்சி ஒன்று ஏற்பாடாகி வருவதாகப் பலமான வதந்தி உலவிற்று. புரட்சி நடக்குமோ நடக்காதோ, ஒன்றுமட்டும் நிச்சயமாக நடைபெற்றுவந்தது,தலைகுனிந்துநடந்து வந்த தாசர்கள், துரைமார்களை நிமிர்ந்து பார்க்கவும், புருவத்தை நெரித்துப் பார்க்கவும் தொடங்கினர். எட்வர்ட்ஸின் ஏக்கத்துக்கு அது போதும்!

போர்வீரன் உடையுடன் ஒரு ஆங்கிலேயன் அந்த மைதானத்தில் உலவிக்கொண்டிருந்தான். பலர் அவனையே உற்று நோக்கிய வண்ணம் இருந்தனர்; சிலர் வணக்கம் செய்தனர்; மற்றும் சிலர், கேலியாகப்பேசிக்கொண்டனர்.

"வியாபாரம்செய்பவனுக்குஏன் இராணுவஉடை?"

"ராணுவ உடைமட்டுமா! அவன் ஒரு பட்டாளமே அமைத்திருக்கிறான்"

"ஏன்?"

"ஏனா? இங்கே இரத்தக்களறி ஏற்பட்டால், நமது நாட்டுமக்களைக் காப்பாற்றி, நமது சாம்ராஜ்யத்தை நிலை நாட்ட"

'அவ்வளவு மோசமான நிலைமையாவந்து விட்டது, பிரிட்டிஷ் ஆட்சி இருக்கிறது, வெள்ளைக்கார வைசிராயும் கவர்னர்களும், சேனாதிபதிகளும் இருக்கும்போது, வியாபாரம் செய்யவந்தவர்கள், உத்யோகம்பார்க்கவந்தவர்கள், இராணுவ உடைதரித்துக்கொண்டு, உலவுவானேன்"

"உடை மட்டுமல்ல! கவாத்தும் நடக்கிறது. ஆயுதங்களும் உள்ளன. பட்டாளம் அமைத்திருக்கிறார்கள். அதிலே, இந்நாட்டிலுள்ள வெள்ளைக்காரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். கலவரம் நேரிட்டால், வெள்ளைக்காரனின் உடைமைக்கும் உரிமைக்கும் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்துநேரிடாதபடி பாதுகாத்துக் கொள்வதற்காகவே இப்பட்டாளம் அமைக்கப்படுகிறது. அந்தப் பட்டாளத்தை மிகத் திறம்பட அமைத்துக் கொண்டிருப்பவரே அதோ இராணுவ உடையுடன் காணப்படும் கர்னல் ஹார்டி," (HARDY)

இதுபோன்றஉரையாடல், அந்த வெள்ளைக்காரனைக் கண்டதும். அவனைப்போலவே இராணுவ உடையுடன் வேறுபலரும் காணப்பட்டனர். வெள்ளைக்காரர்கள் வெகுண்டும் விரண்டும் போயிருந்தனர். புரட்சியைத் தடுக்கக்கூடிய நிலையிலே வைசிராயோ கவர்னர்களோ இல்லை என்றும், புரட்சியை அடக்கிவிடக் கூடிய நிலையிலே, சர்க்கார் வசமிருந்த இராணுவம் இல்லை என்றும், இராணுவத்திலேயே புரட்சி ஏற்பட்டுவிடக் கூடுமென்றும், அந்தப் புரட்சிக்கு, வெளிநாட்டு உதவியும் ஏற்பாடாகி விட்டதென்றும், வெள்ளையர் வாழும் வட்டாரங்களில் பேசப்பட்டது.

கர்னல் ஹார்டி என்பவன், வெள்ளைக்காரர்களின் பாதுகாவலன் என்ற பதவியைச் சிருஷ்டித்துக் கொண்டான். சர்க்காராலும், இராணுவத்தாலும் புரட்சியை அடக்க முடியாது போகும், நாமே தான், வீரச்செயல் புரிந்து, புரட்சியை அடக்கவேண்டும், என்று அவன் திட்டமிட்டுச், சிரமப்பட்டு, ஆள் சேர்த்து, அவர்களுக்குப் போர்ப் பயிற்சியும் தந்து வைத்திருந்தான். கல்கத்தா நகரில்மட்டும் சுமார் 4000-வெள்ளைக்காரர், ஆங்கிலோ இந்தியர்கொண்ட பட்டாளம் திரட்டி வைத்திருந்தான். அவர்கள், கம்பெனிகள், உத்யோக மண்டலங்கள் ஆகிய இடங்களில் உள்ளவர்கள். ஆனால் 'அபாய அறிவிப்பு' தெரிவிக்கப்பட்டவுடன், அவர்கள் ஆயுதமெடுத்துக்கொண்டு கிளம்புவர்; அரைமணி நேரத்திலே, பட்டாளம், உருவாகிவிடும். கர்னல் ஹார்டி இந்த ஏற்பாட்டை மிகச் சாமர்த்தியமாகச் செய்துவைத்திருந்தான்.

★

"கல்கத்தாவிலே, கர்னல் ஹார்டியின் பட்டாளம் இருப்பது, வங்க மக்களிடையே பெருத்த கோபத்தை, ஆத்திரத்தை மூட்டி விட்டது."

"பட்டாளமா? வெறும் உடை மட்டுந்தானா, இராணுவ முறையில்"

"பட்டாளமேதான்! கர்னல் ஹார்டி, ஒரு என்ஜினியர், ஆனால் இப்போது அந்தவேலையைக்கவனிப்பதில்லை. மைதானத்திலே, ஆட்களைத் திரட்டிக்கொண்டு, அவர்களுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறான்"

"திறமையாக?"

"மிகத்திறமையாக"

"சரி! என்னசெய்வது அதற்கு?"

"செய்வதா! அந்தப் படையைக் கலைத்தாகவேண்டும், இல்லாவிட்டால் பொதுமக்கள் ஆத்திரத்துடன் ஏதாவது அமளியில் ஈடுபடுவர்."

"அப்படியும் நடக்குமா?"

"எனக்கு, இங்குள்ள தேசியவாதிகள் நெருங்கிய நண்பர்கள். அதனால்நான்சூக்ஷமத்தைத்தெரிந்து கூறுகிறேன்"

"சரி! என்ன செய்வீர்?"

"வங்காள சட்டசபையில், கர்னல்ஹார்டியின் தனிப் பட்டாளம் இருக்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி..............."

"நிறைவேற்றி..............."

"அதன்படி, படையைக் கலைக்கும்படி உத்தரவு பிறப்பிக்கிறேன்"

"கர்னல் ஹார்டி மறுத்தால்?"

"போலீஸ் இருக்கிறது!"

"போலீசால்முடியாவிட்டால்?"

"இராணுவம்!"

"அதனாலும் முடியாவிட்டால்!"

"வங்காளத்து மக்களே கிளம்பிவிடுவார்கள் ஹார்டியின் படையை எதிர்த்து"

"அதாவது உள்நாட்டு யுத்தம் நடக்கும்"

"ஆமாம்! ஆனால், ஹார்டி அந்த அளவுக்குப் போகமாட்டான். அவனுடைய படையைக் கலைக்க வேண்டுமென்ற என் திட்டத்தை, இந்தியா மந்திரியும், பிரிட்டிஷ் மந்திரி சபை முழுவதும், அங்கீகரித்து விட்டது. தங்கள் உத்தரவுதான் தேவை, தங்கள் அபிப்பிராயமென்ன?"

"படையைக் கலைக்கக்கூடாது."

"கலைக்காமலிருக்க முடியாது"

"ஹார்டியின் படையைக் கலைப்பது பைத்தியக்காரத்திட்டம், நான் அதற்குச் சம்மதிக்க முடியாது."

படையைக் கலைக்க வேண்டுமென்றுபேசியவர், வங்காளக்கவர்னர். படை கலைக்கக்கூடாதுஎன்று சொன்னவர் வைசிராய், இருவரையும் நியமித்தது, பிரிட்டிஷ்தொழிற்கட்சிமந்திரிசபைதான். வைசிராய், கவர்னருடன் பேசிவிட்டு, பர்மா சென்றார், சுற்றுப்பிரயாணத்துக்கு.

★

வங்காளசட்டசபையில், சூடான விவாதம், ஹார்டியின் படை கலைக்கப்படவேண்டும் என்பது பற்றி. ஒரு தனி மனிதன், படை திரட்டுவது அக்ரமம்; ஆகவே அந்தப் படை கலைக்கப்படவேண்டுமென்று சட்டசபை உறுப்பினரில் பலர் உக்கிரமாகப் பேசினர். ஒரு ஆங்கிலேய உறுப்பினர், மேற்படி படை, ஆங்கிலேயரின் சொத்து சுதந்திரம், சூறையாடப்படாமலிருக்கவும், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவுமே இருப்பதாகவாதாடினார். வங்கத்தலைவர் எழுந்தார், "டக்ளஸ் துரைபேசினது கேட்டேன். கல்கத்தாவில் வாழும் பிரிட்டிஷார், வங்கமக்களிடம் அன்றாடம் அஞ்சிவாழவேண்டி இருக்கிறது என்றார், நான் அந்தப் பேச்சைக்கேட்டு ஆச்சரியமுமடைகிறேன், வருத்தமும்கொள்கிறேன். என் பிரிட்டிஷ் நண்பர்களுக்கு ஒரு உறுதி கூறுகிறேன், அவர்கள் கொண்டுள்ள அச்சத்துக்கு ஆதாரமேஇல்லை. சர்க்காரின் உத்தரவின்படி ஹார்டி படை கலைக்கப்பட்டதும், வங்கமக்கள், ஆயுதம் தாங்குவர், ஆங்கிலருடன்போராட அல்ல, அவர்களைப் பாதுகாக்க. அஞ்சவேண்டாம், நாங்கள் ஆங்கிலரைப் பராமரிப்போம். இரண்டு நூற்றாண்டுகளாகப்பிரிட்டிஷார் எங்களுக்குச் செய்துள்ள நன்மைகளுக்குப் பிரதி உபகாரம் செய்ய, எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரச் சொல்கிறேன்" என்று பேசினார். அந்தக்குத்தல்பேச்சுக்கேட்டு, சட்டசபையினர் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். ஹார்டி படை கலைக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பெரும்பான்மை ஓட்டுகள் பெற்று நிறைவேற்றறு. கல்கத்தா நகரமெங்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் ஒழிக! என்ற பெருங்கூச்சல் கிளம்பிற்று.

★

வங்கக்கவர்னரின் மாளிகைக்குள், ஹார்டி, தன் படையின் ஒரு பிரிவுடன் நுழைந்து, கவர்னரையும் உடனிருந்தோரையும் கைது செய்து, கவர்னர் மாளிகையைக்கைப்பற்றிகொண்டான். கவர்னரை மிரட்டி, புதுசர்க்கார் அமைத்துக்கொண்டு, அதற்குத்தன்னைத் தலைவனாக்கிக்கொண்டு, கவர்னரை வெறும் பொம்மை யாக்கினான். மறுத்தவர்கள், எதிர்த்தவர்கள், சிறைப்படுத்தப்பட்டனர். இராணுவச்சட்டம் பிறப்பித்துவிட்டான். புரட்சிப்பொறிகளை நசுக்கும்காரியத்தில் மும்முரமாக ஈடுபட்டான். தலைவர்களைக்கூண்டிலடைத்தான். கல்கத்தா கார்பரேஷன் கலைக்கப்பட்டது. பத்திரிகை ஆபீசுகள் அடைக்கப்பட்டன. ஹார்டியின் ஆட்சி, கல்கத்தாவிலே அட்டகாசமாகிவிட்டது. கல்கத்தாவில் கர்னல் ஹார்டி, தன்பிடியைப் பலப்படுத்திக் கொண்டான். கல்கத்தா மட்டுந்தான்! மற்ற இடங்கள்?

★

திகில்கொண்ட ஹார்டி எதிர்பார்த்திருந்த மகத்தான புரட்சி, மற்றோர்பகுதியில் ஆரம்பமாகி, வேக வேகமாகப்பரவத் தொடங்கிற்று, காட்டுத்தீபோல. கூண்டில் தள்ளப்பட்ட புலிபோல, கல்கத்தாவில் புரட்சி அடங்கிக்கிடந்தது, ஆனால் மற்றப்பகுதியில் புரட்சிப் புலி சீறிப்பாய்ந்துபோரிட்டது.

★

பற்பல சாம்ராஜ்யங்களின் தலைநகராக விளங்கிய டில்லிக்குப்புரட்சி பரவிவிட்டது. பல்வேறுதடவை களமாகி இருந்த டில்லியில் அமளி ஆரம்பமாகிவிட்டது. புரட்சிக்காரர்கள் டில்லியைப் பிடித்துவிட்டனர். வெள்ளையர், தலை தப்பினால் போதும் என்று ஓடலாயினர். புரட்சிப் படை, பிரம்மாண்டமான கும்பலாகிவிட்டது. இதனை நடத்திச்செல்லும் தலைவர்கள், வெளியிலிருந்து உதவியை —முக்கியமாக விமானங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்குள்ளேயும், தகராறுமூண்டுவிட்டது, இந்நிலையில், கர்னல் ஹார்டி, வேறோர் சுதேச சமஸ்தானாதிபதியுடன் ஏற்கனவேசெய்து வைத்திருந்த இரகசிய ஏற்பாட்டின்படி, சுதேசமன்னனின் சேனை, டில்லிக்குக் கிளம்பிற்று, அதனுடன் சேர்ந்து கொள்ள ஹார்டியின் படையும் புறப்பட்டது. கல்கத்தாவைக்கோட்டையாக்கிக்கொண்டு, அங்கே பாசறை அமைத்துக்கொண்ட ஹார்டி, அங்கிருந்துகிளம்பினான் டில்லி நோக்கி. புரட்சிப் படையைத் தோற்கடித்தான். புரட்சித்

(6-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி 31—3—46 ஞாயிறு


## மகத்தான பாடம்

★

"முதலாளிகள் விஷயத்தில் எனக்குஅனுதாபமுமில்லை,அவர்களுடைய நலன் விஷயத்திலே எனக்கு அக்கரையுமில்லை. இந்த வயதில் சுகமாக உட்கார்ந்து கொண்டு, நிம்மதியாக வசதிகளுடன் வாழ்வீதற்குப் போதிய அளவு செல்வத்தை இறைவன் எனக்கு அளித்திருக்கிறன். அதை விட்டு விட்டு, இங்குமங்குமாக ஓடித்திரிந்து, இரத்தத்தை வியர்வையாகச்சிந்தி, அலைந்து இவ்வளவுகஷ்டங்களையும்பொறுப்புகளையும்தூக்கித் தலைமேல் போட்டுக்கொண்டு நான் துன்பப்படுவானேன், இவ்வளவும் முதலாளிகளுக்காகவா? அவர்களின் நன்மையை நாடியா? உண்மையிலேயே அவ்வாறு சிறிதுகூடக்கிடையாது. இவ்வளவுஅலைச்சலும், கஷ்டநஷ்டங்களும் உங்களுக்காகவேதான், ஏழைமக்களாகிய உங்களுக்காகவேதான் இவ்வளவு கஷ்டநஷ்டங்களுக்காளாகி அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன்"

மிக உருக்கமான, இவ்வார்த்தைகள், ஜனாப் ஜின்னா கூறியவை, கல்கத்தாவில் 23ந் தேதி, முஸ்லிம் வாலிபர்கள் அவரிடம், சிலகேள்விகள் கேட்டபோது. பத்துக்கோடி முஸ்லீம்களின் விடுதலைக்குப் பாடுபடும் அவரை, பழித்துப் பேசாத நாளில்லை, இழித்துக் கூருத வேளையில்லை, அவருடையவார்த்தைகளைத் திரித்துக்கூறத் தவறுவதில்லை, காங்கிரஸ் தோழர்கள். ஆனல், அவருடையநோக்கம்,ஈடேறிவருகிறது, லீக் ஒப்புயர்வற்ற ஸ்தாபனமாகிவிட்டு. தூற்றலைச் சட்டை செய்யாமல், துரிதமாகமுன்னேறிவரும் லீக்கின் இறுதி இலட்சியமான பாகிஸ்தான், இன்று பாரெங்கும் பேசப்படும் பிரச்னையாகிவிட்டது.

### பாகிஸ்தான்—இல்லையேல்—கபர்ஸ்தான்!

என்று, லாகூரில் அல்ல, லண்டனில் முழக்கம் கிளம்பிற்று 23—3—46ல். லண்டன் நகரில் டிரபால்கர்ஸ்கொயர் என்ற இடத்திலே பாகிஸ்தான் தினம் கொண்டாடப்பட்டது. பச்சைக் கொடி கெம்பீரமாகப்பறந்து கொண்டிருந்தது. ஆடவரும்மாதருமாகச்சுமார் ஐந்நூறு பேருக்குக்கூடினர். லண்டன் முஸ்லீம் லீக் தலைவர் ஜனப் அப்பாஸ் அலி தலைமை வகித்தார். ஜின்னுகுல்லாய் தரித்துக்கொண்டு ஏராளமானவர்கள் வந்தனர். இக்பால்கீதம் பாடப்பட்டது. முதலமைச்சர் அட்லியின் சொற்பொழிவைக் கண்டித்துப்பேசினர் ஜனப் அப்பாஸ் அலி.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுபட்டு, இந்து ஏகாதிபத்தியத்திடம் சிக்கிக்கொள்ளவா? என்று அவர் கேட்டார். இஸ்லாமியர் தனி இனம். ஆகவே எங்களுக்குத் தனி நாடு தேவை. அதை நாங்கள் பெறுவதெனத் தீர்மானித்து விட்டோம், என்று தோழியர் அகமத் கூறினர். லண்டன் வட்டாரத்திலே பாகிஸ்தான் தினக் கொண்டாட்டம், எழுச்சியை உண்டாக்கிற்று. முஸ்லீம் இனம் மிக உறுதியுடன் இருப்பதை இக்கூட்டம் நன்கு விளக்கிக்காட்டி விட்டது.

மார்ச் 23ந் தேதி பாகிஸ்தான் தினம்.பத்துக்கோடிமுஸ்லீம்களின் சுதந்திர வேட்கை, சுயநிர்ணயஆர்வம், இன்று உச்ச நிலையை அடைந்திருக்கிறது. ஜனப் ஜின்னவின் புகழ், உலக ராஜதந்திரிகளின் கவனத்தை இழுத்து விட்டது. காங்கிரசின் பலமான பிரச்சாரயந்திரம், முஸ்லீம்லீகை அசைக்கவில்லை என்பதை, பாகிஸ்தான் தினக்கொண்டாட்டச்சொற்பொழிவுகள் நன்கு விளக்கிவிட்டன.

காங்கிரஸ், இப்போது கொள்வதெல்லாம், லீக், பாகிஸ்தான்மாகாணங்கள் என்று குறிப்பிடும் இடங்களிலே மந்திரி சபைகளை அமைக்கக்கூடிய அளவுமெஜாரிட்டி பலம் பெறவில்லை, ஆகையால் பாகிஸ்தான் கோட்டை தகர்ந்து விட்டது என்று முடிவு கட்ட வேண்டும் என்பதாகும். இது, அடிப்படையிலே ஒரு தவறை வைத்துக்கொண்டு, வாதிடும் வக்கரபுத்தியின் விளைவு. முஸ்லீம்களேபெரும்பான்மையாக உள்ள மாகாணங்களிலே, முஸ்லீம்களுக்கென்று குறிக்கப்பட்டுள்ள சட்டசபை ஸ்தானங்கள் 1935ம் வருஷச் சட்டப்படி, மிகக்குறைவு. அந்தச் சட்டத்தின் விளைவாகவே, இன்று அந்த மாகாணங்களில், கூட்டு மந்திரிசபைகளே அமைத்து தீரவேண்டிய நிலைமை இருக்கிறது.

ஜனப் ஜின்னா, இந்தச் சட்டத்தின்படி, முஸ்லீம்களின் உரிமை சரிவரப் பாதுகாக்கப்படவில்லை, முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ள மாகாணங்களில் கூட முஸ்லீம் அரசு ஏற்படமுடியாதபடி, தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன, என்பதைப் பலகாலமாக வற்புறுத்தி வந்ததோடு, இந்தத் தேர்தலின் நோக்கம், மந்திரிசபை அமைப்பதற்கு அல்ல, பாகிஸ்தானுக்கு உள்ள செல்வாக்கை நிரூபிக்கத்தான், என்று பட்டவர்த்தனமாகக் கூறி வந்திருக்கிறர். முஸ்லீம் லீக் சார்பில் நிறுத்தப்பட்டவர்கள்,எல்லைப்புறத்தில் தவிர மற்ற இடங்களில் எல்லாம் அமோகமான வெற்றி அடைந்திருக்கிறர்கள்.

இந்தப் புள்ளிவிவரக்கணக்கைப் பொதுமக்கள் உணரமுடியாதபடி, காங்கிரஸ் பிரசாரம் செய்யலாம், ஆனல் பிரிட்டிஷ் மந்திரிகளின் கண்களிலேயும் மண்ணைத்தூவ இந்தப் பிரசாரப் பொடிபயன்படுமா என்பதே இன்றுள்ளபிரச்னை.

லீக், எத்தனை ஸ்தானங்களில் போட்டியிட்டது, போட்டியிட்ட இடங்களிலெல்லாம், எவ்வளவு அபரிமிதமான வெற்றி அடைந்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தை ஜனப்ஜின்னா எடுத்துக் காட்டும்போது, மந்திரிசபை அமைக்க முடியவில்லையே என்று வாதாடினல், யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

எப்படிப்புனஒப்பந்தத்தின் பலனாக, ஜாதி இந்துக்களின் தயவு இருந்தால் மட்டுமே, ஆதித்திராவிடர்கள் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்றநிலை இருக்கிறதோ, அதேபோல, முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ள இடங்களிலும் 1935-ம் வருடத்திட்டம் கூட்டு மந்திரிசபைகள் ஏற்படக் கூடிய விதமாகவே, சட்டசபை ஸ்தானங்களைச் சிருஷ்டித்துவிட்டது. இதனை ஜின்னா ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றையத் தேர்தலில் பெருவாரியான முஸ்லீம்கள் பாகிஸ்தானை ஆதரிக்கிறர்கள் என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது.

காங்கிரசின் வெற்றிக்கும்,லீகின் வெற்றிக்கும், ஒரு மகத்தான வித்யாசம் இருக்கிறது. அந்தவித்யாசத்தின் சூக்ஷமத்தை உணரமறுத்தால், இந்தியாவின் எதிர்காலம் இடர் நிறைந்ததாகவேஇருக்கநேரிடும்.

காங்கிரஸ், 60-வருடகாலமாக வளர்ந்துள்ள, கட்டுப்பாடான, பலம் நிரம்பிய ஸ்தாபனம். பிரச்சார பலம் அதிகம். ஏராளமான பத்திரிகைகள். சென்னைமாகாணம் ஒன்றில்மட்டும், இந்து, எக்ஸ்பிரஸ், பிரீபிரஸ், எனும் மூன்று ஆங்கிலத் தினசரிகள், மித்திரன், தினமணி, தினசரி,பாரததேவி, தந்தி போன்ற தமிழ்த் தின்சரிகள், ஏராளமான வார, மாத இதழ்கள், காங்கிரசை ஆதரிக்க உள்ளன. மற்ற இடங்களிலேயும்இதுபோலத்தான். முஸ்லிம் லீக்கை ஆதரிக்கும் ஒரு தினப் பத்திரிகைகூட இங்கு இல்லை. ஒவ்வொரு நாளும் முஸ்லிம், லீகுக்கு எதிரிடையாக உள்ள பத்திரிகைகளையே படிக்கவேண்டியிருக்கிறது. எந்தப் பத்திரிகையைப் பிரித்தாலும், காங்கிரஸ் செய்தி, நேரு முழக்கம், படேல் பரணி, அருணு ஆலாபனம், அஜாத் அகவல். இவைதான். இவைமட்டுமல்ல, ஜின்னுவின்தேசத்துரோகம், பாகிஸ்தான் பகற்கனவு, முஸ்லிம் லீகின் முட்டுக்கட்டை போன்ற செய்திகள். முஸ்லிம், லீகை ஆதரிக்கும் செய்தித்தாளைப் பெற்றில்லை என்பது மட்டுமல்ல, லீகுக்கு விரோதமான பத்திரிகைகளையேபடிக்கும்நிலைமை. இந்த நிலைமையில், லீக், இவ்வளவு அபாரமான வெற்றி அடைந்திருக்கிறது. எப்படி? இந்தசூக்ஷமத்தைத் தெரிந்துகொள்ளாமல், காங்கிரஸ், தான் பெற்றுள்ளவெற்றிகளை எண்ணிக் களித்துப் பலன் என்ன? காங்கிரசின் கட்டுப்பாடும், பிரச்சார பலமும், வெற்றி பெறுவதற்கான முழு வசதியைத் தந்திருக்கிறது. எனவே காங்கிரசின் வெற்றி, எதிர்பார்த்தது,லீகுக்கு அத்தகையவசதி இல்லை; இல்லாமலே, லீக் பெற்ற வெற்றிபடேலுக்குப்பதைப்பையும், காந்தியாருக்குக் கவலையையும் நெருப்பைக் கக்கும் நேருவுக்கு நெற்றிச்சுருக்கத்தையும் தரக்கூடியதாக இருக்கிறது. எப்படி?

இந்த மாகாணத்திலே, காங்கிரஸ் பிரமாதமான வெற்றி பெற்றது. காரணம் தெரிந்ததே. காங்கிரசைச் சில தனிப்பட்டவர்கள் எதிர்த்தார்களேயொழிய, எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை. திராவிடர் கழகம் எதிர்த்தால்கூட, இதேகதி தான் என்று, கூறிக்களிப்பும்பெருமையும் அடையவிரும்பினல், காங்கிரசார் அதையும் அடையட்டும். திராவிடர்கழகத்தாலும்வெற்றிபெற முடியாதுஎன்றேவைத்துக்கொண்டு பேசுவோம். இந்தநிலை காங்கிரசுக்கு இருக்கக் காரணம், அதன் இடைவிடாத பிரச்சாரம், எண்ணற்ற பத்திரிகைகள். 'மற்றக் கட்சியாரிடப் பத்திரிகை இல்லை, ஆகவே பிரச்சார பீரங்கிக்காரர்கள் ஜெயித்தார்கள். ஆனல்,அந்தப் பீரங்கியின் குண்டுகள் ஏன், லீகிடம் மட்டும்பலிக்கவில்லை? லீகிடம் தினசரியே இல்லை! எப்படி வெற்றி லீகுக்குக் கிடைத்தது? வெற்றிக் கொண்டாட்டம் முடிந்த பிறகாவது, காங்கிரசார் இதனை யோசித்துப் பார்க்க வேண்டுகிறேம்.

வடசென்னையில் காங்கிரசை டாக்டர்கிருஷ்ணசாமி எதிர்த்தார். சுயேச்சையாக நின்றர். காங்கிரசுக்கு 5000த்துச்சொச்சம். அவருக்கு 3000த்துச் சொச்சம் ஓட்டுகள். மகாத்மாவின் கட்சிக்கும் ஒரு தனி மனிதருக்கும் இடையே நடந்த போட்டியில், மகாத்மா சீடர் 1800 ஓட்டுகளே அதிகம் பெற்றர். இதுவும் வெற்றிதான், சென்னையிலே வாசம் செய்யும் ஜனப் ஹமீத்கான், கர்நூலில், தேர்தலுக்கு நின்றர். லீக் அபேட்சகராக, அவருக்குக்கிடைத்தஓட்டு

**12,520**

அவரை எதிர்த்த காங்கிரஸ் முஸ்லீமுக்குக் கிடைத்த ஓட்டு **1155.**

சுயேச்சை முஸ்லீமுக்குக் கிடைத்த ஓட்டு **261.**

இதுவும் வெற்றிதான்! ஆனல் இந்த இரு வெற்றிகளிடையே உள்ள வித்தியாசத்தின் சூக்ஷமம் இருக்கிறதே, அதனைக் காங்கிரசார் உணரவேண்டும்.

பொதுமக்களிடையே இடைவிடாத தொடர்பு வைத்துக் கொண்டுபத்திரிகைபலத்தில்சிறந்து விளங்கும் காங்கிரஸ் ஜெயித்து விடுவது சகஜம், ஆச்சரியத்துக்குரியது அல்ல, அதனுடன் போட்டியிடும் இதர கட்சிகளிடம், காங்கிரசுக்குள்ள பிரச்சார வசதிகளில் நூற்றில் ஒரு பாகமும் கிடையாது. ஆகவே இதர கட்சிகள் தோற்கின்றன, இதுவும் சகஜம், ஆச்சரியமில்லை. ஆனல் ஆச்சரியத்துக்குரியதும், அரசியலில்புதைந்துள்ள அரிய சூக்ஷமமானதும் பிரச்சார பலம் பொருந்திய காங்கிரஸ் பிரச்சார பலம் இல்லாத லீகிடம், தோற்கிறதேஅதுதான் .பாருங்கள்மேலும் சில ஆச்சரியகரமான புள்ளிவிவரங்களை.

ராமனதபுரம் தொகுதியில் லீக் அபேட்சகர், கான்சாகிப் சையத் மகமத் சாகிப் 19,208

எதிர்த்த மகமத்அபுபக்கர் 807

கிருஷ்ண கோதாவரி தொகுதி லீக் அபேட்சகர் ஜனப் மாஹாப் அலிபெக் 18,207

ஜனப் மிர்சா ஹாசான், கான் காங்கிரஸ் 865

வடாற்காடு தொகுதி லீக் அபேட்சகர் ஜனப் மகமத் அன்வார் 19,250

எதிர்த்த ஜனப் அப்துல்ரகிமான் பெய்த் 201

தஞ்சாவூர்த்தொகுதிலீக்அபேட்சகர் ஜனப் மகமத் இபுராகிம் 23,829

எதிர்த்த ஜனப் ஹகீம் அப்துல் அஜீம் 422

இவ்விதம் இருக்கிறது, லீகின் வெற்றி.

காரணம் என்ன? முஸ்லிம் இன எழுச்சி! இவ்வளவு கண்கூடாக உண்மை தெரிந்தும், இனியும் லீகை ஒழித்துவிட்டோ, ஒதுக்கித் தள்ளிவிட்டோ, நாட்டை,ஏகபோகமாக ஆளலாம் என்று காங்கிரஸ் கருதுவது, நடக்கக்கூடிய காரியமா!

பாகிஸ்தானுக்காக, எத்தகைய தியாகமும் செய்வதற்கு, முஸ்லிம்கள் தயாராகிவிட்டனர். இரத்தம் சிந்தவும் தயார், எமது இலட்சியத்துக்காக, என்று புது டில்லியில் பாகிஸ்தான் விழாவிலே பேசிய நவாப் சாடா லியாகத் அலிகான் சொன்னது, அலங்கார வார்த்தை அல்ல, உண்மைநிலை. முஸ்லிம்லீகை இழித்தும் பழித்தும் பேசி, லீக் நவாபுகளின் கோட்டை என்று ஏளனம்செய்து, பயன் இல்லை.

இவ்வாண்டு பாகிஸ்தான் விழாவன்று,பத்துக்கோடிமுஸ்லிம்களின் எழுச்சிக்கும் ஆர்வத்துக்கும் மேலும் ஒரு விருந்து கிடைத்திருக்கிறது. உலகிலே புதியதோர் சுதந்திர இஸ்லாமிய அரசு ஏற்பட்ட செய்தியைப்,பாகிஸ்தான் கோருபவர் கேட்டு மகிழ்வெய்துகின்றனர். பிறைக்கொடி இன்று கெம்பீரமாகப் புதிதாக விடுதலையும் தன்னாட்சியும்பெற்ற இஸ்லாமிய ராஜ்யமொன்றிலே பறந்துகொண்டிருக்கிறது.

பலஸ்தீனுக்குப் பக்கத்திலே ஜோர்டான் ஆற்றோரத்தைத்தாண்டியுள்ள சுமார்34750 சதுரமைல் அளவும், 30 இலட்சம் மக்களும் கொண்ட டிரான்ஸ்—ஜோர்டான்

என்றபிரதேசம், இதுவரை பிரிட்டிஷ் (மேற்பார்வை) ஆட்சியின் கீழ் இருந்தது. இன்று, டிரான்ஸ்—ஜோர்டான், தனி அரசு ஆகிவிட்டது, விடுதலைபெற்று, பிறைக்கொடியைப் பறக்கவிட்டு, தன்னாட்சியுடன் விளங்குகிறது. இதற்கான அதிகார பத்திரமும் பிரகடனமாகிவிட்டது. 30-இலட்சம் பேர்கொண்ட டிரான்ஸ்—ஜோர்டான், தனி அரசு அமைத்தது என்ற நற்செய்தியைக்கேள்விப்படும்போது, பத்துக்கோடிமுஸ்லிம்கள்சார்பிலே கேட்கப்படும் பாகிஸ்தானைப்பெற, ஏன் இஸ்லாமியர்கள் இரத்தம் சிந்தத் தயங்கப்போகிறார்கள்! காங்கிரஸ் அன்பர்கள் இதனை நன்கு யோசித்துப் பார்க்கவேண்டும்.

இன எழுச்சி ஏற்படுகிற வரையில்தான், பத்திரிகை, பிரசார பலத்தைக்கொண்டு ஒரு கூட்டத்தை அடக்க முடியும். இன எழுச்சி ஏற்பட்டுவிட்டால் அந்தப் பிரச்சார பீரங்கிவேட்டுப்பலன்தராது. ஜனாப் ஜின்னா, இஸ்லாமிய இன எழுச்சியை உண்டாக்கிவிட்டார், இனி அதனை மாய்க்க முடியாது.

இனஎழுச்சியின் பலத்தைஉணர்ந்துதான், இங்கு நாமும், சில்லறை அரசியல் காரியங்களிலே ஈடுபட்டு நமது சக்தியைச் சிதறடித்துக் கொள்ளாமல், திராவிட மக்களிடையே இனஎழுச்சி ஏற்படும், உயிர்ப் பிரச்னையைக் கவனித்துவருகிறோம். லீகின் சக்தியின் சூக்ஷமத்தைத் தெரிந்துகொண்டேனும், சில்லறை அரசியலிலும், மின்மினித் திட்டங்களிலும் மனதைப் பறிகொடுத்து, சக்தியைச்சிதறடித்துக் கொள்ளும் தோழர்கள், திராவிடர் கழகத்தில் சேர்ந்து, இன எழுச்சிக்காகப் பாடுபடும் நோக்கத்துடன், பெரியார் பெரும்படையில் சேர முன்வர வேண்டுகிறோம். மார்ச் 23-ந் தேதி இந்த மகத்தானபாடத்தைத் தருமாக.

# போலீசும் பொது மக்களும்

## புதிய நிலையும் இலட்சியமும் வேண்டும்

## கிளர்ச்சிகள் காட்டும் கருத்து

"என்னங்க இது, காயம்"

"காலிப்பயலுக கல்லை வாரி அடிச்சானுக"

"அட, காலிப்பயலுகளே! ஏன் இம்மாத்திரம் கோவம் வந்திடுத்தாம்? போலீசாச்சேன்னு மட்டுமரியாதை இல்லாமே, இப்படியா அக்ரமம் பண்றானுக"

"அதை ஏன் கேக்கறே, போ. பெரிய அமக்களம் செய்து போட்டானுக. பிறகு தடியாலே அடிச்சி துப்பாக்கியாலே சுட்டுத் தள்ளினோம். பிறகு பயலுக பெட்டிப் பாம்பானாங்க"

"காலமின்னாலும் இது ஒரு கண்றாவிக் காலமாப்போச்சு. எழுந்திருச்சிவாங்க, சாப்பாடு சில்லுன்னு போகுது"

கான்ஸ்டெபிள் கோபாலப் பிள்ளைக்கும், அவர் மனைவி அலமேலுவுக்கும், சாப்பாட்டுக்குமுன்பு, ஒரு இரவு இது போலப் பேச்சு நடக்கிறது, ஊரிலே ஒரு பகுதியில்.

●

மற்றோர் பகுதியில், மண்டையில் காயத்துடன் உள்ளே நுழையும் தன் கணவனைக் கண்டு கலங்குகிறாள் கன்னியம்மாள்.

"இது என்ன, அக்ரமம்! சட்டை வேட்டி எல்லாம், இரத்தக் கறை. வண்டியிலேயிருந்து விழுந்து விட்டீங்களா? மாடு முட்டித்தள்ளிவிட்டதா? ஏனுங்க இது மாதிரி காயமாச்சி"

"கன்னி! ஏன் கேட்கிறே அந்தக் கூத்தை. மனுஷனுங்களை, மாடுக போலத் துரத்தித்துரத்தி அடித்தானுக, கடை வீதியிலே"

"ஐயோ! யாரு? யாரோ ஜப்பான்காரன் என்று சொல்லிக்கிறாங்களே அவுங்களா?"

"இல்லை, இல்லை, நம்ம ஊர் ஜவானுங்கதான், தடியாலே அடிச்சு துப்பாக்கியாலேகூடச் சுட்டாங்க; நான் போயித்தெரியாமேசிக்கிக்கிட்டேன். ஆனா எவ்வளவோ தேவலைன்னு சொல்லணும். வேறே சில பேரு, ஆஸ்பத்திரிக்கே போய்ச் சேர்ந்தானுங்க, இரண்டொண்ணு செத்தும் போச்சு"

"அடி அம்மாடி! ஏன் நடந்தது இது மாதிரி"

"அது பெரிய ராமாயணம், வா, சாப்பிட்டுக்கிட்டே சொல்றேன்",

இரண்டு இடங்களிலும் சாப்பாடு நடைபெறுகிறது.

●

கான்ஸ்டபிள் வீட்டில்

"செச்சே! ஏன் இப்படிக்கூழாக்கிட்டே, சோத்தை"

"நானா கூழாக்கிட்டேன். அந்தப் பாவிங்க தருகிற அரிசிதான், ஒரு கொதிக்குள்ளே இப்படிக் கூழாப் போவுதே"

"நாத்தமாக்கூட இருக்குதே"

"குடலைப் புரட்டுது போங்க. அது எங்கே இருந்துதான்கொண்டு வந்தாங்களோ இந்தமாதிரி புழுத்துப்போன அரிசி, ஜனங்கள் இதைச் சாப்பிட்டுப், படாதபாடுபடுறாங்க"

"நீ எந்தக்கடையிலேவாங்கினே?"

"எல்லாக்கடையிலும் ஒரே இலட்சணம்தான். இஷ்டமா இல்லையான்னு, பேசறாங்க கடைக்காரனுங்க"

"ரொம்ப மோசமாயிருக்கு."

"அவனுங்க நாசமாப்போக, ஏன் இப்படி ஜனங்களை இம்சை செய்யறாங்களோ தெரியலையே"

"தா! மெதுவாப் பேசடி; இது போலத்தான் அந்த ஜனங்கள் கூவினாங்க. மோசமான அரிசியைக் கொடுக்கறானுக, அவனுக நாசமாப் போகன்னு கூச்சலிட்டுத்தான், கலகமே ஆரம்பமாச்சி"

"ஏன் கூவமாட்டாங்க, கலகம் செய்யமாட்டாங்கன்னுகேக்கறேன் கையிலே எடுத்துத்துடைச்சா அரிசி மாவாப்போவுது. தண்ணி கொதிக்கிறதுக்குள்ளேகுழைஞ்சிபோகுது, ஒரே அழுகநாத்தம், எப்படித்தான் இந்தப் பாழாப்போன அரிசியைப் பணம் போட்டு வாங்க மனம் ஒப்பும். ஜனங்கமேலேகொஞ்சங்கூடத் தப்பு இல்லை.

●

மண்டையில் அடிபட்டவன் வீடு.

"கஷ்டப்பட்டு வேலை செய்தமாம், ஏதோ வயிறாச் சாப்பிட்டமாம்னு இல்லையே. இந்தக் கர்மம்பிடிச்ச அரிசியை, அரிசியாகவேசாப்பிடலாம்போல இருக்கு. சோறு செய்துவிட்டா, கிட்டே நெருங்கக்கூடமுடியல்லை,"

"ஆமாங்க, ஏன் இப்படிப்பட்ட அரிசி கொடுக்கறானுக"

"அதைக்கேட்கப் போயிதாண்டி, மண்டையிலே அடி"

"இது என்ன அக்ரமம்! எப்படித்தான் மனசு ஒப்ப இந்த அரிசியைச் சமைக்க—"

"கேட்டா, கலகம் பிறக்குது; கலகத்தை அடக்க, போலீசுவருது, மண்டையிலே இரத்தம் ஒழுகுது"

●

சாப்பாட்டு இலட்சணம் இரு இடங்களிலும்இப்படியேஇருக்கிறது. ரேஷன் அரிசி நன்றாக இல்லை என்று (கலகம் செய்து) அடிபட்டவனும் கூறுகிறான், (கான்ஸ்டபிள் என்றமுறையில்) அடித்தவனும் சொல்கிறான். ஜனங்களிலேயாவது, நிலபுலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள், பணம் நிறைய வைத்துக்கொண்டு கள்ளமார்க்கட்டை தேடுபவர்கள் ஆகியோருக்கு நல்ல அரிசி உண்டு; போலீஸ்காரருக்கு நல்ல அரிசி ஏது? நிலமா நீரா, இல்லை, நிறையச்சம்பளமா? இல்லை! ரேஷன் அரிசிநன்றா இல்லையே என்று ஜனங்களாவது கிளர்ச்சி செய்கிறார்கள், அதிகாரிகளைக் கேட்கிறார்கள், கூட்டங்கள் நடத்துகிறார்கள், கலகம் பிறந்தால் நியாயமும் பிறக்கும் என்று. கான்ஸ்டபிள்கள் என்ன செய்வது! குறை கூறக்கூடாது. மற்றவர்கள் செய்யும் கிளர்ச்சி, கலகம் ஆகியவற்றை அடக்க அமர்த்தப்பட்டிருக்கும், அவர்கள், தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள ஒரு வழியும் கிடைக்காமல், மனதுக்குள்ளேயே, எந்தத்தொல்லையையும் மூடி வைத்துக்கொள்கிறார்கள். ரேஷன்தொந்தரவு ஒன்றுமட்டுமல்ல. சாதாரணகாலத்திலேகூட, போலீசாருக்குக்குறைஉண்டு; நீக்கிக்கொள்ள முடிவதில்லை.

ஆலைத்தொழிலாளர்கள் முதற்கொண்டு அரசாங்க உத்தியோகஸ்தர்வரையிலே சம்பளஉயர்வுக்காகவும், வாழ்க்கையின் அடிப்படைத்தேவைகள் தமக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், கிளர்ச்சி செய்து, கஷ்டநஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டு, சிற்சில சமயங்களில் தோல்வி அடைந்தபோதிலும், பொதுவாகஓரளவு வெற்றி பெற்றுவருகிறார்கள். பொருளாதார முறையிலேகாணப்படும் பேதத்தின் பலனாக, உத்தியோக மண்டலங்களில், ஒருசிலர் உச்சியில் அமர்ந்துகொண்டு, கொழுத்த சம்பளம் வாங்குகின்றனர், அவர்கள் பிறப்பிக்கும் கட்டளைகளை அமுலுக்குக்கொண்டுவர உழைக்கும் எண்ணற்ற சிறு உத்யோகஸ்தர்கள், குறைந்த சம்பளத்தைப்பெற்றுக்கொண்டு, குடும்பபாரம் தாங்கமாட்டாமல், கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்.

போலீசாருக்குள்ளபொறுப்பும்தொல்லையும், வேலையும் வேதனையும் அதிகம், ஆனால் கிடைக்கும் ஊதியமோ மிகக் குறைவு. சிலசமயங்களிலே அவர்கள் அதிகாரத்தைக்கண்டு பொறாமையாகக்கூட இருக்கும். "ஏ! நடுரோட்டிலே, நடக்காதே. ஓரமாகப்போ" என்று கான்ஸ்டபிள்கூறும்போது, நமக்கு, "எவ்வளவு அதிகாரம்! என்னமிரட்டுமிரட்டுகிறாங்க" என்று கோபமாக இருக்கும். அதே கான்ஸ்டபிள், வெயிலில், பாதைநடுவே நின்றுகொண்டு, வண்டிகளை இப்படிப் போ, அப்படிவா, என்று கைகாட்டிக்கொண்டு, ஒழுகும் வியர்வையைக்கூடத் துடைக்கமுடியாமல் கஷ்டப்படும்போது, நடுஇரவில், முள்ளும் கல்லும் நிரம்பியபாதையாக இருந்தாலும், ஆள் அரவம் கேட்டதும், "ஐயா" உத்தரவிட்டால், ஓடுகிறபோது, பார்த்தால், "ஆயிரம்தருவதானாலும் நமக்கு வேண்டாமப்பா இந்தவேலை" என்றுதான் கூறத்தோன்றும். வேலையும் மிகுதி, ஊதியமும் குறைவு, என்பதுமட்டுமில்லை, வீணான பழி, அனாவசியமான விரோதம், இவைகள், அவர்கள்மீது ஏற்படுகிறது.

பொதுமக்களின் தேவைகளை உணராமலும் மனதை அறியாமலும், இப்படிச்செய்தால் இன்னகேடு நேரிடும் என்பதைத்தெரிந்து கொள்ளாமலும், உச்சியில் அமர்ந்திருக்கும் ஒருசிலஅதிகாரிகள் எந்தெந்தக் கட்டளை, திட்டம், பிறப்பித்தாலும், பொதுமக்கள் அவைகளின்படி நடக்கமுடியாமல் கிளர்ச்சியில் ஈடுபட்டால், போலீசே அடக்க அழைக்கப்படுகிறது. மக்கள் உடனே, சர்க்கார் செய்ததைக்கூடமறந்து. போலீஸ்மீதேகோபிப்பர். இந்த ஆத்திரத்தையும் போலீசார் சமாளித்தாகவேண்டும் ஆகவே எந்த விதத்தில்பார்த்தாலும், போலீசாருக்குச் சம்பளவிகிதம் அதிகப்படுத்தப்படவேண்டும், வேலைநேரம் குறைக்கப்படவேண்டும், அவர்களின் குழந்தைகளுக்குக் குறைந்தபட்சம் பத்தாவது வகுப்புவரையிலாவது இலவசப்படிப்புக்குவழி செய்தாகவேண்டும். இந்த அவசியமான காரியத்தைச்செய்யாததால் நேரிட்டவிளைவு விசித்திரமாக இருந்தது.

இதுவரையில் ஜனங்கள் கிளர்ச்சி செய்தனர், போலீசார் அடக்கினர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம், ஜனங்கள்வேலைநிறுத்தம் செய்தனர், ஊர்வலஞ் சென்றனர், உண்ணாவிரதம் இருந்தனர், போலீசார் தலையிட்டனர் என்றபடித்திருக்கிறோம், இப்போது விசித்திரமான செய்தியைக் கேள்விப்படுகிறோம்.

டில்லி போலீசார் வேலை நிறுத்தம் செய்தனர். ஊர்வலம் நடத்தினர். ராணுவம், அவர்களைஅடக்கவந்தது, என்பது போலீசாருக்குமேல் கைதுசெய்யப்பட்டனர்.

கோரக்பூரில், தங்களுக்குத் தரப்படும் ரேஷன் அளவு குறைக்கப்பட்டதைக்கண்டிக்கப் போலீசார், உண்ணாவிரதம் இருந்தனர். என்ற செய்திகளைப் படிக்கிறோம்.

அதாவது, உத்யோகத்துறையிலே போலீசாராக இருப்பதாலேயே, அவர்களுக்கும் பொதுமக்களுக்கு இருக்கும் பிரச்னைகள், சம்பளக்குறைவு, வேலை நேரம்மிகுதி, ரேஷன் தொந்தரவு முதலியன இல்லாமல் போகவில்லை என்பதை இச்சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மத்திய சட்டசபையிலே விவாதிக்கப்படவேண்டிய அளவு, இந்தப் பிரச்னை பலமாகிவிட்டது சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டுள்ள போலீசின் நிலைமையில் நிம்மதியும், வாழ்க்கையில் வசதியும் இருந்தாகவேண்டும் என்பதையும், சமாதானம் அடிக்கடி குலையக்கூடியநிலைமையைச் சர்க்கார் தமது போக்கினாலும் உத்தரவுகளாலும், திட்டங்களாலும்உண்டாக்கிவிட்டு, பிறகு, இயற்கையாகப் பொதுமக்களிடையே ஆத்திர உணர்ச்சி ஏற்பட்டால், அதனை அடக்கப்போலீசுக்கு உத்தரவு பிறப்பித்து, போலீசுக்கும் பொதுமக்களுக்கும் இடையேமனக்கசப்பு ஏற்படும் நிலைமையை உண்டாக்கிவிடக்கூடாது. சட்டமோ திட்டமோ ஏற்பாடு செய்யும்போது, அதனை அமுல் நடத்துவது சுலபமா, பொது மக்கள் மனம் எப்படி இருக்கும் என்பதைச்சர்க்கார் கண்டறியவேண்டும். 'சட்டத்தைப் பிரயோகிப்போம், ஜனங்கள் தொல்லை தந்தால் போலீஸ் இருக்கிறது' என்ற மனப்பான்மையைக் கொண்டால் பலனில்லை. போலீஸ்இலாக்காவிலே, செய்ய வேண்டியது, போலீசாரின் சம்பள உயர்வு. டில்லி போலீசார் மாதம் 80-ரூபாய் கேட்கின்றனர், பம்பாய் போலீசாரின் சம்பளத்தை அந்த மாகாணத்து சர்க்கார்உயர்த்தியிருக்கிறார்கள். சென்னை சர்க்காரும் போலீசாரின் சம்பளத்தை உயர்த்த யோசித்துக்கொண்டிருப்பதாகத்தெரிகிறது. இந்த அகவிலை காலத்திலே, இந்தச்சம்பள உயர்வு மிக மிகஅவசியம் என்பதை நாம் வலியுறுத்துவதுடன், போலீஸ் இலாக்காவின்பொறுப்புகளையும் கடமைகளையும், தொல்லையையும், அனாவசியமான சோதனைக்கு ஆளாகும்படி செய்யும், சட்டமோ திட்டமோ செய்யும் போக்குச்சர்க்காருக்குக்கூடாது என்றும் வலியுறுத்துகிறோம். பொதுமக்கள்மனதிலே அதிருப்தி வளராதபடி, ஆரம்பத்திலேயே சர்க்கார் கவனித்துக்கொண்டால், கலகத்தை அடக்கப்போலீசாரை உபயோகிக்கத் தேவையில்லை அல்லவா; போலீசாரின் போக்கைக்கண்டிக்கப் பொதுமக்களுக்கும் காரணம் இராதல்லவா?

கள்ளன் காமுகன், கொள்ளையிடுவோன், குடியன், முதலானசமூகக்கேடர்களை அடக்கிச்சமாதானம் நிலவச்செய்ய வேண்டிய பொறுப்பே, போலீசுக்குப் பெரும்பாரமாக இருக்கும்போது, அவசரக்கோலத்தை அள்ளித் தெளிக்கும் போக்கில், தினுசு தினுசான புதுப்புதுத் திட்டங்களைச் சர்க்கார் அடிக்கடி வெளியிட்டு, அவைகளை மக்கள் அறிந்தார்களா? ஏற்றார்களா? என்பதையும் கண்டறியாமல், கலகம் பிறந்தால் போலீசை அனுப்புவோம் என்று இருந்துவிட்டால், போலீசாருக்கு ஏற்கனவே இருக்கும் பாரத்துடன், இந்தப்புதிய பாரமும் ஏறுகிறது. உயர்தர அதிகாரிகள் கொஞ்சம் முன்யோசனையுடன் காரியங்களைச்செய்தால், குறைந்த சம்பளம் பெற்றுவரும் போலீசாருக்கு, வீணானவேலை, இருக்காதல்லவா! ஆர அமரயோசிப்பதும், அறிந்து திட்டமிடுவதும், பொது மக்களைக் கலந்து பிறகு புதுமுறைகள் வகுப்பதும் சர்க்காரின் போக்காக இருக்குமானால், போலீசார், பொதுமக்களின் அன்பர்கள் என்ற நிலை பெறுவார்கள். அதுதான் சிறந்த இலட்சியமுங்கூட.



தீராத வயிற்று வலிக்கு
ஜெயராம்
காயசுத்தி லேகியம்

## எமக்கு வந்த கடிதம்

உயர்திரு. அன்புள்ளஐயா அவர்களுக்கு வணக்கம். நான் தங்கள் காயசுத்திலேகியம் அனுபவித்து வந்ததின் பயனாய், எனக்கிருந்த, விடாத வயிற்று வலி, முதுகு வலி, முதலியன நீங்கி நல்ல சுகத்துடன் இருக்கிறேன். என் நண்பர்கள் பலர் ஷை காயசுத்தி லேகியம் தருவிக்கும்படி சொன்னார்கள். ஆகவே அடியிற்கண்ட முகவரிக்கு 5-சேர் காய சுத்தி லேகியம் V. P. பார்சலில் அனுப்பவும்.

தங்கள் வணக்கமுள்ள,
(Sd.) ஆ. வேலாயுதம்,
சர். A. T. P. சங்கம், தூத்துக்குடி.

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, தும்பகோணம்.

எமது சோல் ஏஜண்ட்:—
M. E. அப்துல் ரகிமான் சாகிபு, காயசுத்தி லேகிய வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணமலை.


## 1957-க்கு

3-ம் பக்கத் தொடர்ச்சி

தலைவர்கள் கொல்லப்பட்டனர். டில்லியில்மறுபடியும் பிரிட்டிஷ் கொடியைப் பறக்கவிடுகிறான்.

"புரட்சி அழிக்கப்பட்டுவிட்டது.மீண்டும் டில்லி பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்துவிட்டது. புரட்சித் தலைவர்களில் முக்கியமானவர்கள் கொல்லப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் தலைமறைவாக உள்ளனர், அவர்களைக் கண்டுபிடித்துத் தக்கதண்டனை தரப்படும். பிரிட்டிஷ் ஆட்சி இனி தொடர்ந்து நடக்கும். இதுவரையில், டில்லிதலைநகரமாக இருந்துவந்தது. டில்லி தலைநகரமாகஇருப்பதற்கு இலாயக்கற்றது என்பது இப்போது நன்கு விளங்கிவிட்டது. பனிரண்டு பரம்பரைகளுக்குமேலாகவே டில்லியைத் தலைநகராகக் கொண்டு, பாழாகிஉள்ளன. எனவே, இனி கல்கத்தாவே தலைநகராகும்" என்று வைசிராய் பிரசங்கம் செய்தார். டில்லியை விட்டுச்சர்க்கார் கிளம்பினர்; கல்கத்தா தலைநகராக்கப்பட்டது.

பரட்சிவாடை அடிக்கக்கண்டு, முன்னேற்பாடாகவே வெள்ளைக்காரர்களைக் கொண்ட படையைத்திரட்டி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, புரட்சியை அடக்கி, மறுபடியும் பிரிட்டிஷ் ஆட்சியை நிலைநாட்டியதற்காக கர்னல் ஹார்டி வங்காளக் கவர்னராக்கப்பட்டான்.

★

இதுஒரு கற்பனைக்கதை. நம்முடையதல்ல ஒரு வெள்ளைக்காரன் தீட்டியது, இப்போதல்ல, 1930ல்-!

"இந்தியாவை" என்றென்றும் கட்டி ஆளவேண்டும் என்றநோக்கமும், ஏகாதிபத்யத்தைக் காப்பாற்ற எந்த ஏற்பாடாகிலும் செய்தபடி இருக்கவேண்டும்என்ற வெறியும். கடைசிமுயற்சியாக, விடுதலைக்காக இந்தியாவில் புரட்சி நேரிட்டால், அதனை, எப்படியாவது அடக்கி, ஒடுக்கி, பிரிட்டிஷ் ஆட்சியையே மீண்டும் அமைக்கவேண்டும் என்ற திட்டமும் கொண்ட வெள்ளையர்கள் பலர். அவ்விதமான ஏகாதிபத்ய வெறியைக்காட்டும் நூல் ஒன்றை 1930ம் ஆண்டு, ஹாமீஷ் பிளேயர் (Hamish Blair) என்ற வெள்ளைக்காரன் எழுதினான். இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது அந்த விஷமத்தனமான புத்தகம்.

இந்தியாவில் புரட்சி நடக்கும். அது சமயம் ஒருசில ஆயிரம் வெள்ளையர்கள் கட்டுப்பாடாக இருந்து படை அமைத்துக்கொண்டு எதிர்த்தால், சட்டசபைகளிலே விடுதலை வேட்கையாளர்கள் முழக்கமிட்டாலும் கவர்னர்களும் வைசிராயும் தடுமாறிவிட்டாலும், பிரிட்டிஷ் ஆட்சியைக் காப்பாற்றிவிட முடியும், என்ற நோக்கத்தைப் பிளேயர், தனது கற்பனைக் கதைமூலம், தன் நாட்டவருக்குக் கூறினான். விஷ வாடை வீசும் இந்த நூலில், அந்த ஆசிரியர் கொண்ட கருத்து, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து 1857-ல் சிப்பாய்க் கலகம் நடந்தது போலவே ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு அதாவது 1957ல், புரட்சி நடைபெறும் என்பதாகும். அந்த ஆங்கிலேயன், அத்தகைய புரட்சியையும் அடக்கி, மறுபடி பிரிட்டிஷ் ஆட்சியை ஸ்தாபிக்கமுடியும் என்ற ஆணவக்கருத்தைக்கொட்டுகிறான் அந்தப் புத்தகத்தின் மூலம்.

புரட்சித் தலைவர்களுக்கு இடையே பூசல் ஏற்பட்டுச், சக்தி சிதறிவிடும் என்பதையும், ஏதாவது ஒரு சுதேச சமஸ்தானத்திடம் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டால், புரட்சி மூண்டுவிடும் போது, அந்தச் சமஸ்தானப் படையை உபயோகப்படுத்திச், சரியும் ஆட்சியைத் தூக்கி நிறுத்திவிடலாம் என்றும் மனப்பால் குடித்து மகிழ்கிறான் பிளேயர். இந்தப் பித்தத்தைப் புத்தக வடிவாக்கி, லண்டனில்வெளியிட்டுமிருக்கிறான் 16ஆண்டுகளுக்கு முன்பு. புத்தகத்தின் பெயர் **1957** என்பதாகும். புரட்சி செய்தால் பொசுக்கிவிடுவோம் என்று நம்மவரை மிரட்டவும், புரட்சி நடக்கும் பீதிஅடைந்து பிடியைத் தளர்த்திவிடாதீர், சர்க்காரிலே சோர்வு ஏற்பட்டாலும், இந்தியாவிலே வாழும் வெள்ளைக்காரர்களிடையே கட்டுப்பாடும் திட்டமும் இருந்தால், பழையபடி பிரிட்டிஷ்கொடியைப் பறக்கவிடலாம் என்ற ஆசையை ஆங்கிலேயருக்கு ஊட்டவும் இந்த ஆசிரியர் மிகப் பிரயாசை எடுத்துக்கொண்டு '1957" என்ற தலைப்புடன், ஒரு ஏகாதிபத்ய ஏடு எழுதினான். யாரோ ஒருபைத்யக்காரரின் பேனாவின் கிறுக்கு என்றே இதனை எண்ணி, ஏளனம் செய்து வந்தேன் இன்றுவரை. ஆனால்...........!

★

### "1957"க்கு 1946ல் ஏற்பாடா?

என்று கேட்க வேண்டிய நிலைமைஒன்று ஏற்பட்டிருக்கிறது. எந்தக்கல்கத்தாவில், வெள்ளைக்காரரின் உடைமையையும் உயிரையும் பாதுகாக்க, ஒரு கர்னல் ஹார்டி என்ற வெள்ளையன், வெள்ளைக்காரர்களைக்கொண்ட பிரத்யேகப்படை திரட்டினான் என்று 1957 என்ற கற்பனைக் கதையில்எழுதப்பட்டிருக்கிறதோ, அதே கல்கத்தாவில் இப்போது, 1946ல், கல்கத்தாவில் வாழும், பிரிட்டிஷாரின் சொத்து சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள, அங்குள்ள வெள்ளையர்கள் அரண் அமைத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆயுதங்களும், வெடிமருந்தும் சேகரித்துக்கொள்ளவேண்டு மென்றும், ஏதாவதுகலவரமோ புரட்சியோநேரிட்டால்,வெள்ளைக்காரர்களெல்லாம் அந்தக் கோட்டைக்குள்போய்ப்புகுந்துகொண்டு, ஆபத்தைத் தடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், 48-மணி நேரத்துக்குத் தேவையான உணவுப்பொருள் அங்கே சேகரித்து வைக்கப்படவேண்டுமென்றும், கல்கத்தா வெள்ளையர்கள் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்கள் என்று அமிர்த பஜார் பத்திரிகையில் ஒருசெய்தி வெளிவந்திருக்கிறது.

ஒருபெரிய உபகண்டத்து மக்கள், உயிர்ப்பிரச்னையான விடுதலைக்காகக் கிளர்ச்சி செய்தால், அதனைச்சூழ்ச்சியாலும் பலாத்காரத்தாலும் ஒடுக்கிவிடுவதற்குத்திட்டம் தயாரிக்கத்துணிவதைக், கற்பனைக்கதைமூலம் பிளேயர் என்றஆங்கிலேயன் காட்டினான். இந்த ஆங்கிலேயனுக்குத்தான் எவ்வளவு ஏகாதிபத்ய வெறி! சர்க்காரையும் வைசிராய் கவர்னர்களையும் நம்பிக்கொண்டிராதே, நீயே படைதிரட்டு, என்று தன் நாட்டவரை உசுப்பிவிடுகிறான் ஆணவத்துடன். எவ்வளவு இறுமாப்புடன், மீண்டும் "பிரிட்டிஷ்கொடி பறக்கிறது, புரட்சி ஒழிந்தது" என்று கதையிலே ஒரு வைசிராயைப்பேசவைக்கிறான். இப்படியும் ஒரு ஆதிக்கவெறி இருக்குமா, என்று ஆச்சரியப்பட்டேன், அந்தக்கதையை ப்படிக்க நேரிட்டபோது. வெகுண்ட வெள்ளையரின் வீணுரையை அந்தக்கதை விளக்குகிறதுஎன்று அலட்சியப் படுத்தினேன். இப்போதுவரும் செய்தியோ, கல்கத்தாவிலே கர்னல் ஹார்டியைக்கண்டுபிடிக்க, வெள்ளைக்காரர்கள் முயற்சி எடுத்துக் கொள்வதாகவன்றோ தெரிவிக்கிறது. ஆனால் கல்கத்தாவில் கட்டும் மனக்கோட்டை கவைக்குதவாது,காலம்மாறிவிட்டது, உன் ஏகாதிபத்யக் கடையை மூடுஎன்று நாடு முழுதும் கூறும் இந்த நாளிலே, "1957க்கு" 1946ல் திட்டம் தீட்டுகிறார்கள் துரைமார்கள்; அறிவுப் பஞ்சம் அவ்வளவு அதிகமாகிவிட்டது, அவர்களுக்கு. எந்தக்கோட்டை,சமாளிக்கும் எழுச்சிப்பெற்ற கோடிக்கணக்கான மக்களின் எதிர்ப்பை—எவ்வளவு வெடிமருந்து சேகரித்து என்ன செய்வது? ஆளுக்கொருகை தண்ணீர்வாரி இறைத்தாலேபோதுமே,வெடிமருந்துக்கிடங்கு, சேறு நிரம்பிய குட்டைபோலாகுமே! இதுதானா வெள்ளைக்காரர்கள், தங்களைக்காப்பாற்றிக்கொள்ளக் கண்டுபிடிக்கும் மார்க்கம். வேறு, அறிவுக்குப் பொருத்தமானவழியேதெரியவில்லையா? ஏன் இவ்வளவு அச்சத்துக்கிடையே, ஆபத்துச் சூழ்ந்த இடம் என்று கருதும் இடத்தில், சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டச்சர்க்காரிடம் போலீசும்இராணுவமும் இருந்தும், நமக்குஇவ்வளவு இருக்கும்போது பயம் என்ன என்ற நம்பிக்கையும் இழந்து, பதுங்கிக் கொள்ளக் கோட்டையும், காப்பாற்றிக் கொள்ள ஆயுதமும் வைத்துக்கொண்டு வாழவேண்டும்? இந்த நிலையைவிட, நிம்மதியாக, பிரிட்டன் போய்ச்சேரலாமே!

கல்கத்தாவிலும் சென்னையிலும்,கிழக்கிந்தியகம்பெனி துவக்கப்பட்டபோது, வெள்ளைக்கார வியாபாரிகள், இப்படித்தான், சிறு சிறு கோட்டைகள் கட்டிக் கொண்டு அதற்குள்ளே வாசம் செய்தனர். கோட்டைக்குள்ளே உணவும்இருக்கும். யாராவது ஏதாவதுஎதிர்ப்புநேரிட்டால் என்ன செய்வது என்றதிகிலுடன் வாழ்ந்தனர். அதற்காகச், சிலபோர் வீரர்களைத்துணைக்கு அமர்த்திக்கொண்டனர். அந்த வியாபாரக்கோட்டைகளிலே ஒரு புறம் விற்பனைக்கான சரக்கு இருக்கும், வேறோர்புறம் ஆயுதமும் வெடிமருந்தும் இருக்கும். ஆரம்பத்திலே இருந்த நிலை அது. அந்தியகாலத்திலும் அதேநிலைதான் பொருத்தம் என்று ஆங்கிலேயரில் சிலர் கருதுகிறார்கள்போலும். அவர்களின்திட்டம் சர்வதேசச் சபைகளிலே அமரும் தலைவர்களால், எவ்வளவுகேலியாகப்பேசப்படும் என்பதைக்கூட,அவர்களால் யோசித்துப்பார்க்கமுடியவில்லைப் போலும்.

காலம் மாறிவிட்டதைஉணரமுடியாத அளவு கண்ணில் கொழுப்புடன் உள்ள சிலர், எப்போதும்போலவே தமது அதிகாரமும் அட்டகாசமும் நிலைக்கும்என்று எண்ணி ஏமாறுவர். பிடிதளருவதையும் அடியிலே பள்ளம்வெட்டப்படுவதையும் உணர்ந்துகொள்ள முடியாதவன் புத்தியைஇழந்தவன். உணர்ந்துகொள்ளாததுடன், தன்னுடைய உரத்தகுரல்கேட்டால் ஊரே அடங்கிவிடும்என்றுகடைசிவினாடிவரை நம்பிக்கொண்டிருப்பவன், ஏமாளி. அந்த நினைப்பிலேயே, புதிய புதிய திட்டம் போடுபவன் கோமாளியாவான். வெள்ளைக்காரர்கள் சிலர், இத்தகையஇளித்தவாய்த்திட்டம் போடுகிறார்கள். அவ்வளவு மட்டரகங்களும்உள்ளன மதிநிறைந்த இந்நாட்களிலேயும்!!

---

## சில அரசியல்

8-ம் பக்கத் தொடர்ச்சி

பொருள். சுருங்கச் சொன்னால் "சுதந்திர அதிகாரம்" என்றுகொள்ளலாம். வேதாந்திகள் பரமாத்மாவிற்கு என்னென்ன குணதிசயங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்களோ, அவைகளில் அநேகம் இந்தச் சுதந்திர அதிகாரத்திற்கு உண்டு என்று அரசியல் சாஸ்திரம் கூறுகிறது. எல்லாச் சுதந்திரநாடுகளுக்கும் (sovereign states) இந்தச்சுதந்திர அதிகாரம் (sovereignty) உண்டு. ஆனால், நடைமுறையில் சுதந்திர அதிகாரம் பூராவையும் யாராலும் செலுத்த முடியாது; செலுத்தினாலும் நடக்காது. இந்த அரசியல் பதத்தின் முழு அர்த்தமும் அரசியல்சாஸ்திரத்துடன் நிற்கவேண்டியதுதான். உதாரணம்,எந்தச்சுதந்திர அதிகாரப் படைத்த நாடும் மற்ற நாடுகளில் என்ன நடக்கிறதென்பதைக் கொஞ்சங்கூடக் கவனிக்காமல் தன் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம். ஆனால், இது முடியுமா? ரஷ்யாவும், அமெரிக்காவும் சுதந்திர அதிகாரம்பெற்ற நாடுகள் (sovereign states) ஆனால், அமெரிக்காவிடம் அணுகுண்டுகள் இருக்கும்பொழுது ரஷ்யாஅமெரிக்காவைவிட ஒருபடி குறைச்சல் தானே? ரஷ்யா தாறுமாறுகநடந்து கொண்டால், அமெரிக்கா அணுகுண்டைக் காட்டிப் பயமுறுத்த முடியும்! ரஷ்யாவிற்குச் சுதந்திர அதிகாரம் இருந்து என்ன பயன்? ஆகவே, அரசியல் உலகத்தில், "சுதந்திர அதிகாரம்" படைத்தநாடுகளும், தங்கள் சுயநலத்தையும் பொதுநலத்தையும் கருதித், தங்கள் தங்கள் சுதந்திர அதிகாரத்தின் சில அம்சங்களைத் தாங்களாகவே விட்டுக்கொடுத்துப்,பொதுஉடன்படிக்கைகள் செய்து கொள்ளுகின்றன. சென்றஆண்டுசான்பிரான்சிஸ்கோவில் நடந்த உலக மகாநாட்டில், சுதந்திர அதிகாரம் பெற்ற ஐம்பது தேசங்கள் உலக சமாதானப் பாதுகாப்பிற்காக ஒரு சட்டம் (CHARTER) செய்து, இச்சட்டத்தின் பிரகாரம் நடந்து கொள்வதாக ஒப்புக்கொண்டன. அப்படி ஒப்புக்கொண்டதின் மூலம் தங்கள் சுதந்திர அதிகாரத்தைத் தாங்களாகவே கட்டுப் படுத்திக் கொண்டன. இவ்வாறு நடைமுறையில் இந்த அதிகாரத்தைப் பல வழிகளில் கட்டுப்படுத்திக் கொண்டுதான் ஆகவேண்டும். அப்படியிருக்க, திராவிடர்களோ, முஸ்லீம்களோ சுதந்திர அதிகாரம் பெற்ற நாடுகளாக (sovereign states) இருக்க விரும்பினால், காங்கிரஸ்வாதிகள் என் கண்டிக்கிறார்கள்? சுதந்திர அதிகாரம் என்றால் கட்டுக்கடங்காத அதிகாரம்; (அரசியல் சாஸ்திரத்தின்படி,) இந்த அதிகாரத்தைத் திராவிடர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் கொடுத்தால் மற்ற மக்களுக்குக் கெடுதல் செய்வார்கள், பற்ற மக்களின் உரிமைகளுக்குப் பங்கம் ஏற்படும், மேல் நாடுகள் நம்மீதுபடையெடுத்துநம்மைத் தோற்கடிக்கும், என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இது தவறு. திராவிடர்கள் சுதந்திர அதிகாரம் பெற்ற பின்னரும் மற்ற மக்களுடன் கூடித்தான் வாழவேண்டும். தனி நாடாக ஆனவுடன் திராவிட நாட்டுஎல்லையைச்சுற்றி 'மாகினட்' அரண்கள் கட்டி மற்றவர்களை உள்ளே விடக்கூடாது என்று நாம் சொல்லப் போவதில்லை. அப்படி நடப்பதற்கு நமக்கு என்ன அரசியல் ஞானமே கிடையாதா? சுதந்திர அதிகாரம்என்பதற்கு அரசியல் சாஸ்திரத்தில் கண்டுள்ள அர்த்தத்தை எல்லாம் கூறி, அப்பேர்ப்பட்ட அதிகாரத்தைத் திராவிடர்களுக்குக்கொடுக்கக்கூடாதென்று காங்கிரஸ் வாதிகள் சொல்வது பிரிவினையைஎதிர்ப்பதற்காகச்செய்யும் விஷமப் பிரசாரமே.

## ஓர் நற்செய்தி

பெரியார், அண்ணாத்துரை, புரட்சிக்கவி, நெடுஞ்செழியன், அன்பழகன், ஆகியவர்களின் உருவமைந்த லைன் பிளாக்குகள் எம்மிடம் கிடைக்கும். ஒன்றின் விலை ரூ. 2, தபால் செலவுஎம்மைச் சேர்ந்தது.

கிடைக்குமிடம் :—

**திராவிடன் பதிப்பகம்,**
133, லாங் பஜார், வேலூர். (N. A.)

## திருமணம்

பெரிய காஞ்சிபுரம் ஒலிமுகம்மதுப் பேட்டை ஜனாப் முகம்மது இப்ராஹீம் அவர்களின் திருமண நினைவாக ரூ. 2. 'திராவிட நாடு' வளர்ச்சிக்குத் தரப்பட்டது.

## குமரிக்கோட்டம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படி ஏதாவது பேசுவாள் குமரி. மாடிக்குச்செல்வதற்கு, ஒவ்வோர் படிக்கட்டாகக் கால்வைப்பதுபோலச் செட்டியாரும், ஒவ்வோர்தடவை பேசும்போதும்,ஒவ்வொரு வாசகமாகத் தன் நிலையை உணர்த்துவிக்கக் கூறிவந்தார். குமரி, செட்டியாரிடம் இப்படிப் பட்டநிலை ஏற்படும்என்று துளியும் எதிர்பார்த்தவளல்ல, ஆகவே அவர் பேசினதன் உட்கருத்தை அவள் உணர்ந்துகொள்ளவே இல்லை.

ஒருமுறை செட்டியார், தன் சோகநிலைமையைக் கூறினார், அவருக்குப்பரிந்துபேசவிரும்பியகுமரி,

"ஆமாங்க, எனக்குக் கூடச் சொன்னாங்க, உங்கமகன்கதையை. யாரோஒரு துஷ்டமுண்டே, அவரைக்கெடுத்து விட்டாளாம்" என்றாள்.

"குமரி! அந்தப்பெண்ணைத் திட்டாதே. பெண்கள்என்னசெய்வார்கள். அவன் அவள்மீது ஆசை கொண்டால், அவள் என்ன செய்வாள்பாபம்!" என்று செட்டியார், தன்மருமகள் சார்பிலே ஆஜரானார்! மற்றோர்நாள் "உன் அழகுக்கும் குணத்துக்கும், நீ எங்க ஜாதியிலே பிறந்திருந்தா,உன்தலையிலே,மணல் கூடையா இருக்கும்!" என்றுசொல்லிப் பெருமூச்செறிந்தார். மற்றும் ஓர்நாள், மார்வலிக்குத்தைலம் தடவும்படி,சொன்னார்.கொஞ்சம் கூச்சம்,இருந்தாலும் 'கல்மிஷம்' அற்ற மனதுடன் அவருடையமார்புக்குத் தைலம்பூசினாள் குமரி. சதா சர்வ காலமும் அவள்நினைப்பு நெஞ்சிலே இருந்ததே தவிர,ஒருநாளும்அவள், அன்று அமர்ந்திருந்ததுபோலத்தன் அருகே உட்கார்ந்திருந்ததேயில்லை, அவள் கை, செட்டியாரின் மார்பிலே பட்டபோது, புளகாங்கிதமானார். கண்களை மூடிக்கொண்டார்,அவளுடைய "மூச்சு" அவருக்குத்தென்றல் வீசுவது போலிருந்தது.என்னென்னமோஎண்ணினார். உடலே பதறிற்று அவருக்கு. மார்வலிமட்டுமில்லை, செட்டியாருக்கு குளிர் ஜுரம்என்றுகுமரிஎண்ணிக் கொண்டாள், அவருடைய உடல் பதறுவதைப்பார்த்து.ஜுரம், ஆம்—ஆனால், அந்தநோயைக் கிளறியது அவளுடைய அழகு என்பதைஅவள் அறிந்து கொள்ளவில்லை. ஆபத்து வேளை, ஆனால் தப்பித்துக் கொண்டார் செட்டியார், மீனா அங்குவந்ததால்."மார்வலி, தைலம் தடவினேன், ஜுரம்வரும்போலிருக்கு" என்றாள்குமரி."பார்த்தாலே தெரியுதே" என்று பச்சைச்சிரிப்புடன் கூறிக்கொண்டே போய்விட்டாள் மீனா.

தைலம் பூசிக்கொண்ட பிறகு, செட்டியாரின்தாபம் பன்மடங்கு அதிகமாகிவிட்டது. இனிஇங்கிருந்தால், எந்தநேரத்தில் என்ன ஆபத்து நேரிடுமோ, வெறிமீறி என்னவிபரீதமானசெயல் புரிந்து விடும்படி நேரிட்டுவிடுமோ என்றதிகில் அதிகரித்தது.இனிஇங்கிருக்கக்கூடாது இரண்டோர் நாட்கள், வெளியூர் போய்வருவது நல்லது என்று எண்ணி, மறையூரைவிட்டுக் கிளம்பினார். மனச்சாந்திக்காகஇம்முறையைக் கையாண்டார். ஆனால்எந்த ஊர் சென்றாலும், அவள் பின் தொடர்ந்தாள்.அதோசெட்டியார், அந்தியூர்க்கடைவீதியில் அருணாசலச்செட்டியார் கடையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்.புதிதாக வந்தபம்பாய் சில்க்சேலையின் நேர்த்தியை அருணாசலச் செட்டியார் வாடிக்கைக்காரருக்குக் கூறுகிறார், குழந்தைவேலச் செட்டியாரோ அந்தச்சேலையைக் கண்டஉடனே, அதைக் குமரிக்குக்கட்டி அழகு பார்க்கிறார்! அதாவதுஅந்தச்சேலையைக் கட்டிக்கொண்டு குமரி,தன் எதிரில் நின்று காட்சி தருவது போலத் தோன்றுகிறது செட்டியாருக்கு. எங்கே போனாலும், எதைக் கண்டாலும், விநாடிக்கு விநாடி அவள்வருகிறாள், ஒவ்வோர் தடவையும் ஒவ்வோர்படி அதிகரிக்கிறது அவருடையஆசை. பித்தம் பிடித்தவர்போல மீண்டும்மறையூர் வந்துசேர்ந்தார்.

செட்டியாரின்நிலையை மீனா நன்றாக உணர்ந்து கொண்டாள். சமயமறிந்து, செட்டியாரைத்தனியாகச் சந்தித்து, வெளிப்படையாகவே கேட்டுவிட்டாள்.அவர்முதலில் நடுநடுங்கிப்போனார், பிறகு இல்லை என்று கூறிப்பார்த்தார், கடைசியில் கண்களில் மிரட்சியுடன், "ஆமாம்! எனக்கு அந்தப்பெண் மீது அமோகமான ஆசைதான், ஆனால்..............." என்று பிச்சை கேட்பதுபோலப் பேசினார்.

"பயப்படாதிங்க செட்டியாரே! அந்தப்பெண் ஒரு மாதிரி. இந்த மாதிரி காரியத்துக்குத் தலைபோனாலும் ஒப்பமாட்டாள்" என்றாள் மீனா.

"அது தெரிந்துதானே, நான் இப்படிப் பைத்தியம் பிடித்தது போலாகிவிட்டேன்" என்று செட்டியார் கூறினார்.

"அவள் சம்மதிக்கவே மாட்டாள். நாம்தான் சாமர்த்தியமாக நடந்து கொள்ளவேண்டும். நாளை இரவு, சொக்கனை, ஏதாவது வேலையாக வெளியூருக்கு அனுப்பி விடுங்கள் நான் முடித்து விடுகிறேன்" என்றாள் மீனா. இஷ்டதேவதை பிரசன்னமாகி வரம் கொடுத்தால் எவ்வளவு சந்தோஷம் வருமோ அவ்வளவு ஆனந்தம் செட்டியாருக்கு. சொக்கனை வெளியூர் அனுப்புவது சிரமமில்லை. அனுப்பினார். மீனா, ஏற்பாட்டின்படி, செட்டியாரிடம் வந்தாள், கச்சக்காய் அளவுக்கும் குறைவு ஏதோ லேகியம் அதைக் கொடுத்தாள் செட்டியாரிடம். குமரியைக் கூப்பிட்டனுப்பி இந்த லேகியத்தைத் தின்று விடும்படி செய்யுங்கள், பிறகு, அவள் உங்கள் பொருள்; விடிஞ்ச பிறகுதானேசொக்கன்வருவான்!" என்று யுக்தியும் சொல்லித்தந்தாள். நடுங்கும் கரத்திலே லேகிய உருண்டையை வாங்கிக்கொண்டு செட்டியார், "இது என்ன மருந்து? ஆபத்துக்கிடையாதே' என்றுகேட்டார். "இது என்ன மருந்து என்று நீங்கள் நாளைக்காலையிலே ,என்னிடம்சொல்வீர் செட்டியாரே! நான் போய் குமரியை அனுப்புகிறேன், லேகியம், செய்யும் வேடிக்கையைப் பார்த்துக்கொள்ளுங்கள் நீங்களே" என்றுமீனாகூறிவிட்டுப்போய் விட்டாள்.

அரைகுறையாகக் கட்டப் பட்டிருந்த கோயிலிலேயே ஒரு சிறு அறை செட்டியார் தங்கி இருந்த இடம். அகல் விளக்கு அதிகம் பிரகாசமின்றி எரிந்து கொண்டிருந்தது. வேலையாட்கள் தூங்கும் சமயம். குமரி, அவசரமாக ஓடிவந்தாள் கோயிலுக்கு. அறையிலே செட்டியார் உலவிக் கொண்டிருக்கக் கண்டு, 'என்னாங்க உடம்புக்கு! எனனமோ நொப்பும் நுரையுமா தள்ளுது, போய்ப் பாருடி, யாரையும் எழுப்பாதே, யாருக்கும்சொல்லாதே என்று மீனா அக்கா சொன்னாளே' என்று கேட்டாள்.

செட்டியார், மீனாவின் தந்திரத்தைத் தெரிந்து கொண்டார். "ஆமாம் குமரி! மயக்கமாக இருந்தது, இப்போது இல்லை. மணி பத்து இருக்குமே, பாவம், நீ தனியாகவா இங்கு வந்தே" என்று கேட்டார்.

"ஆமாங்க! மீனா சொன்னதும் எனக்கு, வந்து பார்த்துவிட்டுப் போகனும்னு தோணவே, ஒரே ஓட்டமாக ஓடிவந்தேன். நான் போகிறேனுங்க" என்றாள் குமரி. செட்டியாருக்கு ஆபத்து என்ற உடனே ஓடி வந்து விட்டாளே தவிர, அவருக்கு ஒன்றுமில்லை என்றுதெரிந்ததும், தனியாக அந்த நேரத்தில் அவருடன் இருப்பது சரியல்லவே, என்று தோன்றிற்று.

"ஏன், இந்த வேளையிலே தனியாக இருக்க..............." என்று செட்டியார்கேட்டுமுடிப்பதற்குள், குமரி வெட்கத்துடன், "அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க, நாம்ப இங்கே களங்கமற்றுத்தான் இருக்கிறோம், ஆனா மத்ததுங்க அப்படி நினைக்காது பாருங்க" என்றாள். களங்கமற்ற நிலையில்தான் அவள் இருந்தாள். ஆனால் செட்டியாரின் மன நிலை அவளுக்குத் தெரியாது!

"வந்தாகி விட்டது, குமரி! கொஞ்சம் அறையைச் சுத்தம் செய்" என்று கூறினார் செட்டியார். குமரி உடனே அந்தக் காரியத்தைச் செய்தாள். 'செட்டியாரே! நெல் மூட்டைகளை ஏன் இங்கேயே, போட்டிருக்கிறீர்கள், எலிகள் அதிகமாகுமே" என்று கேட்டுக் கொண்டே, மூட்டைகள் இருந்த இடத்தைச் சுத்தம் செய்தாள். எலிகளைக் காண வேண்டும் என்ற அவசரத்திலே செல்பவர் போலச் செட்டியார், மூட்டைகள் இருக்குமிடம் போனார், குமரி மீதுஉராய்ந்தபடி! அதிலே அவருக்கு ஒரு ஆனந்தம், அவள் கொஞ்சம் அஞ்சினாள். சுத்தமாக்கிவிட்ட பிறகு, வியர்வையை முந்தானையால்துடைத்துக்கொண்டு நின்றாள். செட்டியார், "குமரி! இந்தா, உனக்குப் பரிசு! சாப்பிடு, ருசியாக இருக்கும், உடம்புக்கும் நல்லது" என்றுகூறி லேகியத்தைக் கொடுத்தார்.

"என்னதுங்க அது, நாவப்பழ மாட்டம்!" என்றுகேட்டாள்குமரி, லேகியத்தைப் பணிவுடன்பெற்றுக் கொண்டு.

"அது மீனாட்சி பிரசாதம்" என்றார் அவர்.

"அப்படின்னா?" என்று குமரி கேட்டாள்.

"மீனாட்சி கோயிலில், சாமிக்குப் படைத்தது. சாப்பிடு, நல்லது" என்று கூறிவிட்டு, வேறு ஏதோ வேலையைக்கவனிக்கப் போகிறவர் போல அறைக்கு வெளியே சென்றார். குமரி, லேகியத்தைத் தின்றாள். சுவையாகவேஇருந்தது. எப்போதும் அவள் கண்டதில்லை அதுபோல. லேகியத்தைத் தின்று விட்டு, செட்டியார் வந்ததும் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நெல் மூட்டை மீது சாய்ந்தபடி நின்று கொண்டே, அந்த அறையிலே இருந்த படங்களைப் பார்த்தபடி இருந்தாள். திடீரென்று அந்த அறையிலிருந்த விளக்குமிகப் பெரிதாகவும், மிகப் பிரகாசமாகவும் அவளுக்குத்தெரிந்தது, கொஞ்சம் ஆச்சரியத்துடன், மறுபடி விளக்கைப் பார்த்தாள், ஒரு விளக்கல்ல, பல விளக்குகள் இருக்கக் கண்டாள்! எலி,மூட்டைகளிடையே ஓடக்கண்டாள், குனிந்து, கோல் ஒன்று எடுத்து விரட்டினாள், எலி ஒருபக்கமிருந்து மற்றோர் பக்கம் ஓடிற்று, குமரி, "ஓடிவிடுவேனா! அம்மாடி! எவ்வளவு சாமர்த்தியம்! ஆனாஇந்தக்குமரியிடமா நடக்கும்" என்று கூறிக்கொண்டே எலியை வேட்டையாடினாள். கடைசியில் எலி தப்பித்துக்கொண்டே ஓடிவிட்டது. ஒருசுண்டெலிக்கு எவ்வளவு சாமர்த்தியம் பார்த்தயா? என்று கேட்டாள் யாரும்எதிரிலேஇல்லை. சே! யாரும் இல்லை இங்கே, யாரிடம் பேசுகிறோம், என்று நினைத்தாள், சிரிப்பு பொங்கிற்று, சிரித்தாள். மேலும் மேலும் சிரித்தாள். உரத்த குரலிலே சிரித்தாள். இடையிடையே பாடவுமானாள். அறை முழுவதும் ஜோதிமயமாக அவளுக்குத் தெரிந்தது, குதூகலம் ததும்பிப் பொங்கி வழிந்தது. ஆடை நெகிழ்வதையும் கூந்தல் சரிவதையும்கவனியாமல், சிரித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தாள். குமரியின் கண்கள், உருள ஆரம்பித்தன! தூக்கம் வருவது போன்ற உணர்ச்சி—கருமணி மேல் இமைப்பைக்குள்ளே போய் புகுந்து கொள்வது போல, மேலுக்குப் போகிறபடி இருந்தது, என்றுமில்லாத அசட்டுத்தனமான தைரியம். லேகியம் அவளை ஆட்டிவைக்கஆரம்பித்தது, வார்த்தைகள் குழைந்து குழைந்து வெளிவரத் தொடங்கின. செட்டியார், அந்தச் சமயமாகப் பார்த்து உள்ளே நுழைந்தார்.

"குமரி!"

"செட்டியாரே!"

"ஏன், இப்படி இருக்கறே?".

"ஏன் செட்டியாரே, ஆடிக்கிட்டே இருக்கறே. ஆமாம், ஏன் இத்தனி விளக்கு"

ஒருசமயம் குமரிக்குப் பைத்யம் பிடித்துவிட்டதோ, என்று செட்டியாருக்குத், திகில் உண்டாகிவிட்டது.

"குமரி! உட்கார்"

"எங்கே உட்காரவாம்!"


அங்கே இருந்த நாற்காலியிலே செட்டியார் உட்கார்ந்துகொண்டு, "குமரி! இங்கே, வா! இப்படி உட்கார்" என்று கொஞ்சினார்.

குமரி, "என்ன அது! ஏனய்யா, செட்டியாரே! விளையாட்டா செய்யறே!" என்று மிரட்டினாள், செட்டியார், லேகியம் குமரியின் புத்தியைக் கெடுத்துவிட்டது, ஆனால் அந்த நிலையிலும் அவளை இணங்க வைக்கவில்லை என்று நினைத்து மேலும் பயந்தார். மறுவிநாடி, குமரி கலகலவெனச் சிரித்தாள், செட்டியார் அருகேபோய், அவருடைய முகவாய்க்கட்டையைப்பிடித்தாட்டி, 'செட்டியாரே! செட்டியாரே!" என்று ஏதோ பாடத்தொடங்கினாள், அதற்கு மேல்செட்டியாரால், பயத்துக்குக் கட்டுப்பட்டிருக்கவும் முடியவில்லை. "கண்ணு! குமரி!" என்று கொஞ்சியபடி, அவளை அணைத்துக் கொண்டு, முகத்தோடு முகத்தைச் சேர்த்தார், இதழையும்................

'சே, கட்டேலே போறவனே!' என்று கூவிக்கொண்டே, செட்டியார் பிடியிலிருந்துதிமிரிக்கொண்டு கிளம்பினாள் குமரி. இதற்குள், ஆடை நெகிழ்ந்து புரண்டிடவே, காலிலே புடவையின் ஒருமுனை சிக்கிக் கொள்ள, இடறிக் கீழே வீழ்ந்தாள். செட்டியார், அவளைத் தூக்கி நிறுத்தினார், அவள் துவண்

(அடுத்த பக்கம் பார்க்க)

"கௌரி பற்பொடி."




பல்லில் சீழ் இரத்தம் வரும் பயோரியாவை ஆச்சரியமாய் குணமாக்கி விடுகிறது. எல்லாவூர்களிலும் ஏஜண்டுகள் தேவை. சாம்பிள் விலை விபரத்திற்கு எழுதவும்.

சரஸ்வதி வைத்தியசாலை
பழனி (S.I.)

## குமரிக்கோட்டம்

*7-ம் பக்கத் தொடர்ச்சி*

டாள். அவளுக்கு மேலும் மேலும் மயக்க உணர்ச்சி அதிகரித்தது. எதிர்க்கும் போக்கும் போய் விட்டது. அவளும், அணைப்புக்கு அணைப்பு, முத்தத்துக்கு முத்தம், என்ற முறையில் விளையாடத் தொடங்கினள்.

"கண்ணு!"

"ஏன், மூக்கு!"

"இதோ பார்!"

"மாட்டேன், போ"

"ஒரே ஒரு முத்து"

"வெவ்வெவ்வே"

இன்பவிளையாட்டு! செட்டியார் பல நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைவிட, மிகரம்மியமாகிவிட்டது.

செட்டியார் மடிமீது தலைவைத்து அவள் சாய்வாள், செட்டியார், குனிந்து ஒரு முத்தம் தருவார், தலையைப்பிடித்து அவள் தூங்கிக் குட்டுவாள், பிறகு திமிரிக் கொண்டு எழுந்திருப்பாள், செட்டியாரைப் பிடித்திழுத்துத் தன் மடியில் தலையைச்சாய்த்துக்கொள்ளச் சொல்வாள், செட்டியாருக்கு மூச்சுத் திணறும்படி முத்தங்கள் சொரிவாள். ஒரு ஆண்பிள்ளையின் பார்வை சற்று வேகமாகப்பாய்ந்தால் கோபிக்கும் குமரிக்கு, இவ்வளவு "சரசத்தன்மை" இருக்குமென்று செட்டியார் நினைத்ததில்லை! செட்டியாருடையமுழுக்கு பூச்சு, பக்திபாராயணம், ஆச்சாரம்சனுதனம்ஆகியவற்றைக் கண்டவர்தான், நள்ளிரவில், அவர் கல் உடைக்கவந்த கன்னியின் கன்னத்தைக் கிள்ளிக்கொண்டும், கூந்தலைக் கோதிக்கொண்டும், காமுகக்குமரன் போல ஆடிக்கிடக்கக் கூடியவர் என்று எண்ணியிருக்க முடியும்! காலை முதல் வேலைசெய்த அலுப்பினால் அவள் குடிசையிலே, கையே தலையணையாகக் கொண்டு தூங்கி இருக்க வேண்டியவள், ஒரு இலட்சாதிகாரியின் மடியிலே ஒய்யாரமாகச்சாய்ந்துகொண்டு இருக்கிறாள்! கைலாயக்காட்சியைக் கனவிலே கண்டு இரசிக்க வேண்டிய நேரத்திலே பக்திமானான செட்டியார், தன்னுடைய வாலிபமகன், காதலித்தவளைக்கடிமணம்புரிவேன் என்றுசொன்னதற்காக, காதலாம், காதல்! ஜாதியைக்கெடுத்துக்கொள்வதா, குலம் நாசமாவதா, ஆச்சாரம் அழிவதா, ஒரு பெண்ணின் சிநேகத்துக்காக, என்று கனல் கக்கியசெட்டியார், ஒருபெண்ணை, கூலிவேலை செய்யவந்தவளை, நடுநிசியில், கட்டிமுடியாதகோயிலில், கண்ணே! மணியே! என்றுகொஞ்சிக் கட்டித்தழுவிக்கொள்கிறார், அதுவும்அவள்தன்னுடையநிலையை இழந்துவிடும்படியாக மயக்கம் தரும் லேகியம் சாப்பிடும்படி செய்து. செட்டியாருக்கு இவைகளை எண்ணிப்பார்க்க நேரமில்லை, அவருக்கு அளவில்லாத ஆனந்தம், எத்தனையோ நாட்களாகக்கொண்டிருந்த இச்சை, பூர்த்தியாயிற்றே என்ற சந்தோஷம்! இன்ப இரவு அவருக்கு.

இன்பஇரவுக்குக் கடிகாரமேது? கோட்டான் கூவினால்கூடக் குயிலின் நாதமாகவன்றோ அந்த நேரத்தில் தொனிக்கும். கருத்த மேகம் சூழ்ந்தவானமுங்கூட, அன்றுதனி அழகாகத்தானே காணப்படும். இன்பத்துடன் அளவளாவும்நாள், அமாவாசையாக இருந்தாலும், பௌர்ணமியாகிவிடுகிறதுஎன்பார்கள். செட்டியாரின் நிலை அதுதான். அவர் மனதிலே அந்தநேரத்தில், கொஞ்சமும் பயமில்லை, "என்னகாரியம் செய்தோம்! நமது வயது என்ன! வாழ்க்கை முறை எப்படிப்பட்டது. எவ்வளவு பாசுரம் படித்தோம், எத்தனை திருக்கோயில் வலம் வந்தோம். காமத்தின் கேடுபற்றி எத்தனை புண்ணிய கதை படித்திருக்கிறோம். ஒரு கன்னியை, — அவள் நிலைதவறும்படி செய்து — தகுமா — இவ்வளவு மோகாந்தகாரத்தில் மூழ்குவது சரியா—என்று சிந்திக்கத் துளியும் முடியவில்லை.

அவளுடைய அதரம், அதன் துடிப்பு! அவளுடைய விழிகள், அவை கெண்டைபோல ஆடுவது! அவளுடைய துடியிடை! குழையும் பேச்சு! இவைகளைக்கண்டு, ரசித்துக்கொண்டிருந்த நேரத்தில் அவருக்கு வேறுவிதமான நினைப்பு வருமா!

எந்த வாயால், "காமத்துக்குப் பலியாகி ஜாதியைக்கெடுக்கத்துணிந்தாயே, நீ என் மகனல்ல, என் முகாலோபனம் செய்யாதே, போ வீட்டை விட்டு" என்று கூறினாரோ, அந்தவாயால், செட்டியார், அழகுக்கு அர்ச்சனைசெய்துகொண்டிருந்தார், காதல் கீதம்பாடிக் கொண்டிருந்தார், இது இதழல்ல, கனி, கன்னமல்ல ரோஜா, கண்ணல்ல, தாமரை, என்று கவிதைகளைப் பொழிந்துகொண்டிருந்தார். தூங்கிக்கிடந்த ரசிகத்தன்மை முழுவதும் வெள்ளமெனக்கிளம்பிற்று. இன்ப இரவு அவருக்கு! அவளுக்கோ, ஏமாந்த இரவு! அவள் அறியமாட்டாள், காமத்துக்குத் தான்பலியாக்கப்படுவதை. அவள் ஏதோ ஓர் உலகிலே சஞ்சாரம் செய்துகொண்டிருந்தாள். அந்த உலகிலே, நிற்கமுடியவில்லை, நடக்க முடியவில்லை, கண்கள்சுழன்றபடி உள்ளன, ஏதோ ஓர் வகை களிப்பிலே மூழ்கி மூழ்கி எழுந்திருக்க வேண்டி இருக்கிறது. காரணம் தெரியவில்லை களிப்புக்கு. ஆடலும் பாடலும் திடீர்திடீரென்று கிளம்புகிறது, லாகிரியால்ஏற்பட்ட ஆனந்த நிலையிலே அவள் இருந்தாள். அவள் நிலை இழந்தாள், அவர் இன்பம் பெற்றார். தான், சூதுசெய்து அந்தச்சுந்தரியை அடைந்ததாகவே அவர் எண்ணவில்லை. எப்படியோ ஒன்று எதிர்பார்த்தது கிடைத்து விட்டது என்றதிருப்தி. அதுமட்டுமில்லை, சாமர்த்தியமாக அந்தச் சரசியைப்பெற்றுவிட்டோம்என்ற சந்தோஷம். மதில்சுவரின்மீது ஓசைபடாமல் ஏறி, மேல் வேட்டியை வீசிக் கிளையை இழுத்து, கிளையிலே கூத்தாடியமாங்கனியை மெள்ளப்பறித்தெடுத்து, முகர்ந்து பார்த்துத் தின்னும்போது, அதன் சுவையிலே இலயித்துவிடும் கள்ளனுக்கு, கனி திருடினோம் என்ற கவனங்கூட வருவதில்லை, மீறிவந்தாலும், தன் சாமர்த்தியத்தைத் தானே புகழ்ந்துகொள்வானே தவிர, செச்சே! எவ்வளவு சூதாக நடந்துகொண்டோம் என்று எண்ணிச் சோகிக்கமாட்டானல்லவா! கனியைக்களவாடுபவனைவிட, கன்னியரைக் களவாடுபவன், கட்டுதிட்டம், சட்டம்சாத்திரம், பதிகம் பாசுரம் ஆகியவைகளின் பிடியிலா சிக்குவான்! முள்வேலியைத்தாண்டிவிட்டோம் என்று கருதிக்களிப்பான். இன்ப இரவு. அவ்வளவுதான் அவருக்குத்தெரியும்! அவள் ஓர் அழகி, அவ்வளவுதான் அவருக்குத்தெரியும். அவளை அடைந்தாகிவிட்டது, அதுபோதும் அவருக்கு. குறும்புப் பார்வைக்கும் கேலிப் பேச்சுக்கும்கூடக் கோபித்துக் கொள்ளும்குமரி, குழந்தைபோலத் தூங்கிவிட்டாள், குழந்தைவேலச் செட்டியாரின்மடியில்சாய்ந்தபடி. செட்டியார், மடியில் சாய்ந்திருந்த மங்கையைப்பார்த்தபடி இருந்தார். நெடுநேரம் தூங்கவில்லை, பிறகு, அப்படியே அவரும், நெல்மூட்டைமீது சாய்ந்தபடி நித்திரையில்ஆழ்ந்தார். ஆதவன் உதித்தான்!

(அடுத்த இதழில் முடியும்)

# சில அரசியல் பதங்கள்


(எஸ். வேதரத்னம்)

காங்கிரஸ் வாதிகளும், காங்கிரஸ் பத்திரிகைஆசிரியர்களும்சில அரசியல்பதங்களைத்தினந்தோறும்பிரயோகித்து வருகின்றனர். Unity, separation, sovereignry (ஒற்றுமை, பிரிவினை, சுதந்திர அதிகாரம்) என்ற வார்த்தைகளையும், இவைகளைச் சேர்ந்த மற்ற வார்த்தைகளையும், சமயத்திற்குத் தகுந்தாற்போல் திரித்துக்கூறி பாமர மக்களின் மனதை மயக்கப் பார்க்கிறார்கள். சாதாரண சம்பாஷணையில், "ஐக்கியமாக" வாழ்தல் என்றால், "ஒற்றுமையாக" அதாவது சிநேக பாவத்துடன் வாழ்தல் என்றும், 'பிரிந்து' வாழ்தல்என்றால் ஒற்றுமைக் குறைவுடன் அல்லது விரோத மனப்பான்மையுடன் வாழ்தல் என்றும் பொருள்கொள்ளலாம். வார்த்தைகள் சந்தற்பத்திற்குத்தகுந்தாற் போல் பொருள் மாறுப்டுவது வழக்கம். உதாரணத்திற்காக எடுத்துக்கொண்ட மேற்சொன்ன வார்த்தைகளும் அரசியல் சாஸ்திரத்தில், அரசியல் பதங்களாக உபயோகப் படும்பொழுது வேறு அர்த்தத்தைக் கொடுக்கும். ஐக்கிய அரசியலமைப்பு' (Unitary Government) என்றால் எல்லாமக்களும் "ஐக்கியமாக,, அல்லது ஒற்றுமையாக அல்லது சிநேக பாவத்துடன் வாழ்கிற அரசியலமைப்புஎன்று அர்த்தமில்லை. அரசியல் சாஸ்திரத்தில் மனிதன் அரசியல் ஞானம் பெற்ற நாளிலிருந்து எத்தனை எத்தனை அரசியலமைப்புகளை ஏற்படுத்தி இருக்கிறான் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த அமைப்புகளில் "ஐக்கிய அரசியலமைப்பு" என்பதும் ஒன்று. பல பெயர்களில் இதுவும் ஒரு பெயர். அதிகாரம், பல பிரிவுகளிடம், அல்லது பல மக்களிடம் பகிர்ந்து கொடுக்கப் படாமல் ஒரே இடத்தில் அல்லது ஒரே ஒரு அரசாங்கத்தின் கையில் தங்கியிருக்கும். இந்த அமைப்பை அரசியல் பாஷையில் "ஐக்கிய அரசியல் அமைப்பு"என்றுசொல்லுவார்கள். இவ்வளவுதான் இதன் அர்த்தம். அப்படியிருக்க, மக்கள் 'ஐக்கிய' பாவத்துடன் அல்லது ஒற்றுமையாக அல்லது சிநேகமாக வாழ வேண்டும் என்றால் 'ஐக்கியஅரசியலமைப்பு'(Unitary Government) இருந்தால் தான் முடியும் என்று சொல்லுவது விஷமத்தனம்; 'ஐக்கிய' என்ற பதத்தின் அரசியல் அர்த்தத்தையும், சாதாரண சம்பாஷணையில் உள்ள அர்த்தத்தையும் மாறுக உபயோகப்படுத்தி மக்களின் மனதைக் குழப்பச் செய்வதற்கு ஒரு தந்திரமாகும். பாமர மக்களை ஏமாற்றுவதற்காக 'ஐக்கிய' அரசியலமைப்பின் கீழ் எல்லோரும் 'ஐக்கிய' மாக அல்லது சிநேகமாக வாழ்கிறார்கள்என்றும், 'பிரிந்த' அரசாங்கங்களில் எல்லோரும் சண்டை போடுவார்கள் என்றும், வார்த்தைகளைத் திரித்து அர்த்தம் சொல்லுகிறார்கள். 'ஐக்கிய' அரசியலின்கீழ் மக்கள் ஐக்கியமாக வாழ்தலும் உண்டு. ஆனால் சிலநாடுகளில் ஒன்றாகவாழ மனமில்லாத பல இனப்பட்ட மக்களை ஒரு "ஐக்கிய அரசியலமைப்பின்" ஆளுகைக்குள் கொண்டு வந்ததால் சதா சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு, நாடு முன்னேற்றம் அடையத் தடைகள் ஏற்பட்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம், 'பிரிந்து போன மக்கள், நாடுகள், தங்கள் சுயநலத்தைக் கருதியோ அல்லது நாகரீகத்தொடர்பினாலோ சிநேக அல்லது 'ஐக்கிய' உடன் படிக்கைகள்செய்து கொண்டு ஒற்றுமையாக வாழ்வதையும் நாம் காண்கிறோம்.

அமெரிக்கர்கள் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் அரசியலமைப்பிற்கு உட்பட்டு, பிரிட்டிஷ்அதிகாரிகளால், பிரிட்டிஷ் சட்டத்தின் பிரகாரம் ஆளப்பட்டு வந்தார்கள். ஆனால் "ஐக்கிய" மனப்பான்மை இல்லை. பிறகு சுதந்திரப் போர் செய்து பிரிந்தார்கள். பிரிந்த பின் குறைகள் நீங்கியதால் ஐக்கிய மனப்பான்மைவளர்ந்தது. அமெரிக்கர் இரண்டு உலக யுத்தங்களில் பிரிட்டிஷாருக்கு உதவி புரிந்து உயிரைக்காப்பாற்றினார்கள். ஆனால் மற்ற தேச உதாரணங்களை மேம்போக்காக எடுத்துக் கொண்டு அவை பிரகாரம் நாமும் நடக்க வேண்டுமென்று சொல்லுவதும் பிசகு. ஒவ்வொரு நாட்டின் நிலைமையும் வெவ்வேறு. நாட்டின் நிலைமைக்குத் தகுந்தபடி அரசியலமைப்பை நிர்ணயிக்க வேண்டும்.

பிரிவினைக்கு விரோதமாகப் பிரச்சாரம் செய்வதற்காகக் காங்கிரஸ் வாதிகள் மற்றொரு ஆங்கிலப் பதத்தைக் கொலை செய்கிறார்கள். சாவ்ரினிடி என்ற ஆங்கில வார்த்தைக்கு "மட்டற்ற, யாருக்கும் கட்டுப்படாத, கட்டுப்படுத்த முடியாத அதிகாரம்" என்று

(6-ம் பக்கம் பார்க்க)



கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
எ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 155.
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.

Edited Printed and Published by C N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeevaram.